தன்மொ

தமிழ்நாட்டு நிலை !

பொற்பிழப்பால் நலந்தேடிப் புனைசுருட்டா
　　பொருள்சேர்க்கும் பொய்மை மாந்தர்
கற்பிழப்பால் கலைகற்றுக் கருவழிப்பால்
　　கலைவளர்க்கும் கயமைப் பெண்டிர்;
சொற்பொழிவால் தொண்டாற்றித் திரைப்
　　　　　　　　　　　[படத்தா
　　தமிழ்வளர்க்கும் தலைவர் கூட்டம்;
மற்போரால் பெரும்பணத்தால் அரசமைக்
　　மதிகேடர்; தமிழர் நாட்டே!

தி. பி. [illegible]. சிலை (மார்கழி)

ரூ0 காசு

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;'' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி–4 | மார்கழி தி. பி. ௧௯௯௭ (1966 திசம்பர்) | ஓலை–11

இராசாசி ஓர் அரசியல் நரி!

இந்தியா தன்னுரிமை பெற்றவுடன், அதற்கு வெள்ளைக்காரன் இட்ட அடிமை விலங்கு தகர்க்கப்பட்டதேயன்றி, இந்தியர்கள் தம்முள் தாமே இட்டுக்கொண்ட பல வகையான அடிமை விலங்குகள் இன்னும் உடைக்கப்படவில்லை. இப் பெரிய நிலப்பரப்பில் உள்ள மக்களில் ஒருபுறத்து மக்கள் அரசியல் உரிமையின்றியும், ஒருபுறத்து மக்கள் பொருளியல் உரிமையின்றியும், ஒருபுறத்து மக்கள் குமுகாய உரிமை இன்றியுமே கிடக்கின்றனர். தமிழகத்து மக்களோ குமுகாயம், அரசியல், பொருளியல் எனும் முத்துறையிலும் மூவகை விலங்குகளால் பிணிக்கப்பட்டு, உரிமையின்றிக் கிடக்கின்றனர். இக்கருத்து தமிழர் எனக் கூறப்படுபவர் பலருக்கும்கூட ஒப்புதலையாய் இராது என்பதை அறிவோம். ஆனால் அவ்வாறான ஒரு நிலையே அவர்கள் அவ்வாறு அடிமைப்படுத்தப்பட்டுக் கிடப்பதற்கு ஒரு பெரிய சான்றாகும். அடிமை தன்னை அடிமை என்று உணராத வரையில் தான் அடிமைப்பட்டுக் கிடப்பதை ஒப்பான் அன்றோ? அவ்வாறு உணர்கையில்தான் உரிமை உணர்வு முளைக்கின்றது. அதுவே பின் விடுதலை வேட்கையாகக் கிளைக்கின்றது.

பொறுப்பாசிரியர்:– பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்:– தங்கப்பா.
உரிமை, வெளியீடு: தாமரை, உலக முதல்வி.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1.

தமிழர்களைப் பொறுத்தமட்டில் இவர்களுக்குக் கிடைக்கவேண்டிய குமுகாய, அரசியல், பொருளியல் விடுதலைகளுக்குத் தடையாக விருப்பவர் முறையே பார்ப்பனரும், வடவரும், அவருள்ளிட்ட பெரும் முதலாளிகளுமே ஆவர். இம் முத்துறையிலும் இம்மூவரும் இன்று பகைவர்களாகவே இருந்து வருகின்றனர். குமுகாய நிலையில் தமிழர்களை அடிமைப்படுத்தியிருப்பன குல, சமயக் கட்டுப்பாடுகளும் அவற்றின் வழியாக வந்த அறியாமையும் ஆகும். அரசியல் நிலையில் இவர்கள் முழு ஆட்சியுரிமையின்றியும், மொழி உரிமையின்றியும் அடிமைப் பட்டுக் கிடக்கின்றனர். பொருளியல் நிலையில் இவர்கள் வடநாட்டுத் தென்னாட்டு முதலாளிமார்களால் நலம் உறிஞ்சப்பட்டு ஏழ்மை நிலையுற்றுக் கிடக்கின்றனர். புறத்தே பார்ப்பவர்களுக்கு இம் முத்துறையிலும் இவர்கள் பிற மக்களைப் போலவே உரிமை பெற்றிருப்பதாகத் தோன்றினும், அகத்தே நோக்குவார்க்கே இவர்களின் இரங்கத்தக்க நிலை தெளிவாகத் தெரியவரும். இப்பொழுது அரசியல் கட்சிகள் எல்லாம் சேர்ந்து எழுப்பும் சிக்கல்களுக்கெல்லாம் தனிப்பட்ட எவரும் பொறுப்பாகாதது மட்டுமன்றி, இம் மூன்று வகையான அடிமை நிலைகளே முழுப்பொறுப்பான பெருத்த காரணங்களாகும். மேலே கூறப் பெற்ற இம்மூன்று விடுதலைகளிலும் தமிழர் பெறவேண்டிய முதல் விடுதலை குமுகாய விடுதலையே ஆகும். குமுகாயத்தில் ஓரின மக்கள் சமநிலைப் படுத்தப் பட்டாலன்றி அவர்களாலேயோ, அவர்களைத் தூண்டி விட்டோ நடத்தும் அல்லது நடத்தப்பெறும் எந்தவகையான அரசியல், பொருளியல் போராட்டமும் நேரடியாகவன்றி மறைமுகமாகவேனும் ஒடுக்கப் பெறும் என்பது வரலாறு நமக்குக் காட்டுகின்ற உண்மை. இதற்கு, வழிவழியாய் ஆங்காங்குள்ள வலிந்த அல்லது பெருத்த சூழ்ச்சிகளைக் கொண்ட ஓரினத்தால் ஆட்டிவைக்கப்பெற்றுக், குமுகாய நிலையில் இன்னும் முன்னேற்றம் கொள்ளாத தமிழர் இனமும், ஆப்பிரிக்க அமெரிக்கநாட்டு நீகிரோ இனமும் கண்காணும் சான்றுகளாகும்.

இவ்வுண்மைகளை இன்னும் சற்றுத் தெளிவாகப் பார்ப்போமானால், பார்ப்பனரின் வலிந்த சூழ்ச்சியும் வல்லாண்மையும் குமுகாயத் துறையில் மட்டுமின்றி, அரசியலிலும் பொருளியலிலும் கூட மிகவும் மேம்பட்ட போக்கிலேயே ஊடுருவி நிற்கின்றன. இதற்கு மாறாக இன்று வடநாட்டில் பார்ப்பனரைவிட வடவரே மிக்க அதிகாரமுற்றவர்களாக இருப்பதால், பார்ப்பனரின் போராட்டம் சமயம் என்ற போர்வையிலோ அறம் என்ற பெயரிலோ இக்கால் நடத்தப்பெற்று வருகின்றது.

தமிழர் குமுகாய விடுதலையின்றிக் கடந்த ஈராயிரம் ஆண்டுகளாகத் தாழ்த்தப்பட்டுக் கிடக்கின்றனர். அதற்கு முன்பு இருந்தே ஆரியப்பார்ப்பனர் அக்கால் இருந்த ஏமாளி அரசர்களையும், இரக்கவுணர்வால் பேதையராக விருந்த பொதுமக்களையும் தம்வயப்படுத்தி

வேள்வி, கணியம் முதலிய மந்திர மாயங்களாலும், ஏமாற்று அரசியல் நடவடிக்கைகளாலும் தமிழரை முற்றும் அடிமைப்படுத்தினர். தூய்மையுடன் தனித்து வழங்கிய தமிழ் மொழியையும் கலப்புற்ற தாக்கி மொழிக் கலப்பும், கருத்துக் கலப்பும், இனக்கலப்பும் செய்து கையோங்கினர். அன்றிலிருந்து படிப்படியாகத் தமிழர் தாழ்ந்தனர். இவற்றிற்கெல்லாம் அவர்களின் மறைநூல்களிலிருந்தும் தமிழர் தம் பண்டைய நூல்களிலிருந்தும் மறுக்கமுடியாச் சான்றுகள் ஏராளமாக உள்ளன. அன்று அவர்கள் ஏற்படுத்திய குலச் சேற்றிலிருந்தும், சமயச் சகதியிலிருந்தும் தூய இறைநெறியரான தமிழரை விடுவிக்கப் பல போராட்டங்கள் நடைபெற்று வந்துள்ளன. ஆனால் அப்போராட்டங்களின் தோல்விக்கெல்லாம் முற்றும் முழுக் காரணமாயிருந்தவர்கள் தமிழர்க்குள்ளேயே முளைத்த விடணர்களும், பிரகலாதன்களும் ஆகிய கோடாரிக் காம்புகளே! 'தமிழ்மொழியினும் தேவமொழியான வடமொழியே உயர்ந்தது' என்று நக்கீரனிடத்துச் சொற்போரிட்ட குயக் கொண்டான் முதல், 'சமற்கிருதம் கற்காமற்போயின் பொறியியல் அறிவை முற்றும் பெற வாய்ப்பில்லை' என்று இக்கால் திரிபுரை கூறித்திரியும் சென்னைத் தொழில் நுட்பக் கல்லூரி இயக்குநரும், வையாபுரியின் மூன்றும் பிறங்கடையரும், (முதலிரண்டு பிறங்கடையர் தெ. பொ. மீயும், அண்ணாமலை முத்துச்சண்முகமும் ஆவர்) ஆன முத்தையன் (இவரைப்பற்றிய செய்திகளும், இவர் கூறும் துணிந்த புரட்டுகளுக்கு மறுப்பும் விரைவில் தென்மொழியில் வெளிவரும்) வரை தமிழையும் தமிழரையும் தாழ்த்திய - தாழ்த்திக் கொண்டிருக்கின்ற கோடாரிக் காம்புகளே ஆகும். இப்படித் தமிழரைத் தமிழர்க்குள்ளேயே தோன்றிய ஒருசிலரைக்கொண்டு ஆட்டுவிக்கவும், அடிப்படுத்தவும் அவ்வக்கால் ஆரியத்தலைவர்கள் பலர் தோன்றிக்கொண்டே உள்ளனர். அவ்வழித்தோன்றி, இக்கால் தமக்கும் தம் வழியினர்க்கும் புறம்பாகப் போகும் இந்திய அரசையே சேற்றிற் புகுந்த எருமையெனக் குழப்பிக் கொண்டிருக்கும் ஆரியத் தலைவரே திரு. இராசாசி அவர்கள்.

திரு. இராசாசியின் அறிவும், வினைப்பாடும் என்றும் ஆரியப் பார்ப்பனர்களின் நலங்கருதியே நிற்கும் காந்த முட்கள்! அவர் காட்டும் வழி ஆரியர் வெட்டிய படுகுழிக்குத் தமிழரையும் பிற இனத்தவரையும் இட்டுச்செல்லக்கூடியதாகவே இருக்கும் என்பதில் எவர்க்கும் எள்ளளவும் ஐயப்பாடு வேண்டா. ஐயப்பாடு கொண்டவர் எவராயினும் அவர் தமிழராகவும் தமிழர் நலங் கருதுபவராகவும் இருக்கவே முடியாது. இதற்குக் கடந்த காலத் தமிழகத்தின் அரசியல் வரலாறும், குமுகாய வரலாறுகளுமே சான்று கூறி நிற்கும். தென்னாட்டுக் கலப்பற்ற ஆரியப் பார்ப்பனராகிய அவர் நெஞ்சம் ஆரியர்களின் வேள்விக் களரி. அவர் எழுதும் ஒவ்வோர் எழுத்தும் ஆரியப்பார்ப்பனரின் வலிந்த ஊடுருவலுக்காக அடிக்கப் பெறும் முளைக்குச்சியே! அவர் பேசித்திரியும் ஒவ்வொரு பேச்சும் ஆரியப் பார்ப்பனர்க்காக உயிர்க்கப்

படும் வலிந்த மூச்சேயாகும். அவரிடத்துக் கொள்ளும் எவ்வகையான ஒப்பந்தமும் அவர் பிணிக்கும் கட்டுக்கயிறே ஆகும்! இவற்றைத் தமிழர் கடந்த பன்னூறு ஆண்டுகளாகவும்-இன்றும் உணராமற் போயினும் இனி வரும் எதிர்காலத் தமிழர் கட்டாயம் உணர்வர் என்பதில் துளியும் ஐயமின்று.

திரு. இராசாசியின் உருவில் அல்லது அவர் பேச்சின் உருவில் வெளிவரும் ஆரியச் சாணக்கியம் இந்தியாவையே அடிமை கொள்ளும் திறம் படைத்தது. அவர் அசைக்கும் ஒவ்வொரு விரலசைவுக்கும் ஏற்ற பொருத்தமான பொருளை, பனிமலையிலிருந்து குமரிமுனை வரை ஊடுருவிக்கிடக்கும் பார்ப்பனரே அன்றிப் பிறர் அறிய ஒல்லாது. அவர் கண்ணசைவிற்கும், கையசைப்பிற்கும் தனித்தனிப் பொருள்கள் உண்டு. அவரின் அமைதிக்கும். அவர் சீற்றத்திற்கும், நகைப்பிற்கும் கூடத் தனித்தனிப் பொருள்கள் பார்ப்பனர்தம் அகரமுதலிகளில் சொல்லப்பட்டிருக்கின்றன. சுருங்கக்கூறின் இந்தியப் பார்ப்பான் எந்த உருவில் இருந்தாலும், எந்த இடத்திலிருந்தாலும், எந்த நிலையில் வாழ்ந்தாலும் அவனுக்கும் இராசாசியின் அசைவிற்கும் பெருத்த தொடர்புண்டு. மொத்தத்தில் அவர் இக்கால ஆரியத் தலைவர். அவர் புன்னகை தமிழர் நலத்திற்கு முன் தூக்கப்பெறும் வாள் ஒளி! அவர் பாராட்டு தமிழர்க்கு வெட்டப்பெறும் படுகுழி! இந்தியப் பெரும்பரப்பில் உள்ள ஆரிய பார்ப்பனரால் தமிழர் பெற்ற தொல்லையையும் துயரத்தையும் போல் வேறு எந்த இனத்தினரும் பெற்றிலர். அவர் தொடர்பால் தமிழர் இழந்த செல்வங்கள் பலப்பல. அவர் இழந்த பண்பாடுகள் பற்பல; நாகரிகங்கள் பற்பல; செப்பங்கள், செம்மாப்புகள், ஒழுகலாறுகள், உயர்வுகள் பற்பல! அவர்தம்மால் தமிழர் வரலாற்றில் ஏறிய கறையை எத்தனை எத்தனை மறைமலையடிகள், திரு. வி. க.கள் பெரியார் இராமசாமிகள், அண்ணாத்துரைகள் தோன்றி அழுத்தி அழுத்தித் துடைத்தாலும் போக்கிவிட முடியாது. இவ்வுலகிலேயே பண்டைய கிரேக்கர், எகுபதியர் முதலிய பழைய நாகரிக மக்கள் பெற்ற பெருஞ்சிறப்புகளைவிடத் தமிழர் பெற்ற சிறப்புகள் ஏராளம்! கொள்ளையோ கொள்ளை! ஆனால் அத்தனை பெருமைகளும், வளர்ந்து மணம்பரப்பிய அறிவு நிலைகளும் நாகரிக முகடுகளும் ஆரியப்பார்ப்பனர் என்ற நாடோடிக் கூட்டத்தால் சிதைக்கப் பெற்றன. இதனால் உலகமே தனக்கு முன்னோடியாக இருந்த ஓர் ஒப்புயர்வற்ற மீமிசை மக்களினத்தை இழந்து விட்டது என்று சொல்லலாம். இவையெல்லாம் வெறும் கற்பனையோ, கதையோ, கனவுகளோ அல்ல. ஏக்கப் பெருமூச்சுகள்! வரலாற்றுக் குமுறல்கள்! கண்ணீரால் எழுதப்பெற்ற பாவிய வரிகள்! அம்மாவோ! இத்துணைச் சிறப்பு வாய்ந்த மக்களின ஓவியங்கள் அத்தனையும் இன்று அழிக்கப்பெற்றன. அவ்வாறு அழித்துவரும் ஒரு வலிமை வாய்ந்த-கரவு வாய்ந்த-ஏமாற்று நிறைந்த ஆரிய இனத்தின் கடைசித்தலைவராக இருப்பவரே இராசாசி! இவரைத்

தமிழர்கள் இனங் கண்டு கொள்ள வேண்டுமென்பதற்காகவும், இவர் முயற்சிக்கு என்னருமைத் தமிழர்கள் துணைபோகக் கூடாது என்பதற்காகவுமே இவற்றை இங்கெடுத்துக் கூறவேண்டி வந்தது.

ஆரிய இனத்தின் தனித்தலைவராக விளங்கிக் கொண்டிருக்கும் இராசாசியின் அரசியல் போராட்டங்கள் தனி வடிவம் பெற்றவை. அவர் பொருளியல் போராட்டங்கள் தனி உருவம் சான்றவை. அவர் கூறும் சீர்திருத்தங்களுக்கு அடியில் என்றுமே ஆரிய வேர் கிளைத்துக் கொண்டிருக்கும். இவற்றை மனத்தில் உட்கொண்டே அவர் போக்குக்குப் பொருள் காணவேண்டும்.

இக்கால் இந்தியாவில் எழுந்துள்ள அரசியல் அழுகல்கள் இந் நாட்டை ஆண்டுகொண்டிருக்கும் பேராயக்கட்சியின் தான்தோன்றித் தனமான-முரட்டுத்தனமான போக்கின் விளைவு என்பதை எவரும் எந் நிலையிலும் மறத்துவிட முடியாது. ஆனால் அத்தகைய விளைவையே தங்களுக்குத் துணையாகப் பயன்படுத்திக்கொண்டு, குழம்பிக் கிடக்கும் மக்களைத் தங்கள் கொட்டாரத்திற்கு அழைத்துச்செல்லும் நிலைகளையே நாம் மறக்கமுடியாமல் கவனமாகப் பார்க்க வேண்டியுள்ளது; கண் காணிக்க வேண்டியுள்ளது. குமுகாய உரிமையற்றுக் கிடக்கும் மக்களிடம் குமுகாய விடுதலை நாடகமாடியும், அரசியல் உரிமையற்றுக் கிடக்கும் மக்களிடம் அவர்களுக்குப் புரியாத அரசியல் பாட்டிசைத்தும், பொருளியல் தாழ்ச்சியுற்றுக், காய்ந்த வயிறும் மேய்ந்த நலனுமாக ஒட்டியுலர்ந்து பேசவும் திறனற்ற மக்களிடம்-தங்களுக்குற்ற தேவைகளைத் தாங்களே கேட்டுக்கொள்ளவும் தெரியாதமக்களிடம்-செல்வச் சிறப்புகளை அழகுபெற எழுதிக்காட்டியும் நடித்துக்காட்டியும் ஆட்சி நாற்காலிகளைப் பிடிப்பதற்கு இராப்பகல் காத்துக்கிடக்கும் வேட்டை நாய்களையே நாம் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. பதவியெனும் பச்சை அரத்தத்திற்குப் பணம் என்னும் பலிக்கடாக்களை தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் வெட்டிச் சாய்த்துக் கொண்டிருக்கும் இந்நிலையில், அவ்வரத்தம் குடிக்க நாக்கைத் தொங்கப்போட்டுக் கொண்டிருக்கும் ஆரிய நரிகளை நாம் இனங்காட்ட வேண்டியுள்ளது. அது நாம் நம் தலைமேலே எடுத்துப்போட்டுக் கொண்ட கடமைகளில் தலைமையானதும், இன்றியமையாததுமாகும்.

ஆரியப்பார்ப்பனர் தம் வேராக நின்று இயங்கும் இராசாசி வேண்டும் மாற்றங்கள் இரண்டு. ஒன்று வழிவழிக் காலமாகத் தம் திருமறைப் பட்டயத்தின் வைப்பூட்டாக இருந்துவரும் தமிழகத்தில், தம் செல்வாக்குக் குறைக்கப்பட்டு வருதலை-குமுகாய நிலையில் விழிப்பேற்பட்டு வருதலைத் தவிர்த்துத் தம் இனத்திற்குக் காப்பேற்படுத்துவது. இரண்டு, தமிழகத்தின் இந்நிலைக்குச் செவிசாய்த்துக் கொண்டு வரும் வடவரின் ஆட்சி வண்டியில் தம் இனத்தை ஏற்றிவைப்பது. இவ்விரண்டு மாங்காய்களையும் ஒரே கல்லில் அடிப்பதற்கே திரு. இராசாசி அவர்கள் காலத்தையும் கருவியையும் எதிர்நோக்கிக் காத்திருக்கின்றார்.

தமிழர்கள் இந்நிலையில் புரிந்து கொள்ள வேண்டிய சில விளக்கங்கள் இவை. நாம் குமுகாய நிலையில் அடிமைப்பட்டுக் கிடப்பது பார்ப்பனர்க்கு; அரசியல் நிலையில் அடிமைப்பட்டுக் கிடப்பது வடவர்க்கு; பொருளியல் நிலையில் அடிமைப்பட்டுக் கிடப்பது அப்பார்ப்பனரும், வடவருமே ஆண்டு நுகர்ந்துவரும் முதலாளித் தன்மைக்கு என்பதை நாம் முதலில் அறிந்து கொள்ளல் வேண்டும். இதை இன்னுங் கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால் நமக்கு முதல் பகை பார்ப்பனரே! இரண்டாவது பகையே வடவர்! பார்ப்பனரின் பகை உட்பகை. வடவரின் பகை புறப்பகை. பார்ப்பனரின் உட்பகை நமக்கு இன்று நேற்று ஏற்பட்ட தன்று; கடந்த மூவாயிரம் ஆண்டுகளாகத் தமிழகத்தைச் சுற்றிச் சூழ்ந்து வருவது; பின்னிப் பிணித்து வருவது. வடவர் பகை நமக்குக் கடந்த பதினேழு ஆண்டுகளாகவே ஏற்பட்டு வருவது. அன்றைய வடநாட்டுப் பகை வேறு. இன்றைய வடநாட்டுப்பகை வேறு. அன்றைய பகை ஆரியப்பகை; இனப்பகை. இன்றைய பகை ஆட்சிப் பகை. தமிழர்க்கு நலம் பயவாத இந்த இரண்டு பகைகளும் வெட்டிப் புதைக்கப்பட வேண்டியவையே ஆகும். அவ்வாறு செய்யாவிடில் தமிழர் இனம் இன்றிருக்கின்ற நிலையினின்று இன்னும் தாழும் என்பதும், தமிழ்மொழி இன்னும் சிதைக்கப்பட்டு ஒழியும் என்பதும் மறுக்கமுடியாத உண்மைகளாகும். இந்த உண்மைகளைப் புரிந்து கொண்டால், நாம் இந்த இடர்ப்பாடான நேரத்தில் செய்யவேண்டுவது என்ன என்பது திருக்குறளில் சொல்லப்பட்டடிருக்கிறது.

தன்துணை யின்றால்; பகையிரண்டால்; தானொருவன்
இன்துணையாக் கொள்கவற்றில் ஒன்று.

பகைத்திறந்தெரிதலில் வருகின்றது இக்குறள். எதிர்க்கப்படுவோன் தான் ஒருவன்; அவன் தனக்குத் தன் இனத்தைத் தூக்கி நிறுத்தும் துணைவன் ஒருவனுமில்லன்; அவனுக்கு உற்ற பகையோ இரண்டு. இந் நேரத்தில் அவன் செய்ய வேண்டுவது என்ன? அந்த இரண்டு பகைகளிலும் எந்தப் பகை ஓரளவு இனிய பகை; அல்லது எளிதே களையத்தகுந்த பகை என்பதைப் பார்த்தல் வேண்டும். அவ்வாறு பார்த்து எப்பகை எளிதே களையத் தக்கதோ அப்பகையையே துணையாக நின்று தனக்கு நெடுநாளைய பகையாகிய, தன் உட்பகையாக இருந்தே நலங்கெடுக்கும் ஒரு பகையை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதே குறள் நமக்குக் காட்டும் நெறியாகும். இக்காலத் தமிழர்களின் இடர்ப்பாட்டிற்கு, முன்கூட்டியே வழி காட்டியாக எழுதிவைக்கப்பட்டதாகத் தெரிகின்றது இக்குறள்.

வடவரின் அரசியல் வல்லாண்மையால் நமக்கு நேரடியான–முழுமையான திங்கு இன்னும் ஏற்பட்டு விடவில்லை. அவரின்–அல்லது

அவர் ஏறியுள்ள பேராயக் கட்சியின் வண்டி இன்னும் நமக்கு எதிர்ப் போக்காக நிறுத்தப்படவே இல்லை. மொழித்துறையிலும் அதன் உட்கிடையான அரசியல் துறையிலும் வடவரின் கை இன்னும் ஓங்கி விடவில்லை. அப்படியே அஃது ஓங்கினாலும் தமிழர்களின் பெருத்த கிளர்ச்சியால் அவ்வாட்சி வண்டி கவிழப்போவது உண்மை! ஆனால் அவ்வாறு கவிழ்க்கப்படும் ஆட்சி வண்டியில் தமிழனே ஏறவேண்டுமேயன்றி ஆரியப் பார்ப்பனரைத் தப்பித் தவறியும் ஏற்றிக்கொள்ளுதல் கூடாது. அவரைப்பற்றிய ஐயம் தமிழர்க்குத் தீர இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் போதல் வேண்டும். அத்துணை அளவில் அவர்களின் நச்சுச் செய்கை தமிழர்களை நிலைகுலைத்திருக்கின்றது. எனவே, தமிழன்தான் கைப்பற்றிய அரசியல் வண்டியில் தானே ஏறத் தகுதி பெறும் வரை—தன்னுணர்வும் தன்னாற்றலும் தன்னுண்மையும் பெறும் வரை, இவன் நமக்கு நன்றாகத் தெரிந்த கொள்ளையனோடு கூட்டுப்போதல் பல்லாற்றானும் தீங்கு பயப்பதே ஆகும். அக்கூட்டு எவ்வகைக் கூட்டாயினும் நமக்குத் தீதே! 'குடியாட்சி அமைப்பில், தேர்தல் விளையாட்டில் நாம் கலந்து கொள்வதைத் தவிர்த்தல் இயலாது; அப்படித் தவிர்ப்பது அரசியலாகாது' என்று அரசியலை மட்டும் பேசிக்கொண்டு தொடை தட்டித் திரியும் தமிழர்கள் ஒருவேளை படை திரட்டிப் போனாலும், அப்படையில் ஆரியப் பார்ப்பனரின் சாணக்கியத் தனத்திற்கு இடங்கொடுக்கவே கூடாது என்பதே தமிழர்களுக்கு நாம் விடும் எச்சரிக்கை.

அண்மையில் புதுத்தில்லியில் நடந்த தன்னுரிமைக் கட்சி மாநாட்டில் திரு. இராசாசி அவர்கள், "தன்னுரிமை (சுதந்திரா)க் கட்சியினர் பொறுமையுடன் பேராயக் கட்சியின் கொடுங்கோல் ஆட்சியையும் ஊழலையும் எதிர்த்துப் போராட வேண்டும். இந்தப் போராட்டத்தை ஓர் அறவழியான போராட்டமாகவும், சமயக் கடமையாகவும் கருதுதல் வேண்டும். இஃது எனக்கு ஒரு கட்சியின் அரசியல் போராட்டம் அன்று; அறவழிப் போராட்டமே (அதாவது தர்ம, தார்மீக, மதப் போராட்டமே)என்றும், சென்னையில் நடந்த அவர் பிறந்த நாள் கூட்டத்தில், "பேராயக் கட்சியைக் கவிழ்ப்பதும் நல்ல ஆட்சியை ஏற்படுத்துவதும் ஆகிய இரண்டு நிகழ்ச்சிகள் நடக்கவே வேண்டும்" என்றும், குறிப்பிட்டுள்ளார். முன் குறிப்பில் அவர் நடத்துவது ஒரு கட்சியின் அரசியல் போராட்டம் அன்று என்ற குறிப்பிற்கு, இராசாசியின் அகர முதலியில் 'ஓர் இனத்தின் தன்னுரிமைப் போராட்டம்' என்றே பொருள். அந்த இனம் பார்ப்பன இனமே! அடுத்து, இரண்டாவது குறிப்பில் உள்ள 'நல்ல ஆட்சியை ஏற்படுத்துவது' என்னும் கூற்றுக்குப் பார்ப்பன ஆட்சியை ஏற்படுத்துவது என்பதே. மற்றப்படி அவருடன் சேர்ந்துள்ள கட்சிகள் யாவும் அது தானே, தானே என்று எண்ணி இருமாப்பதில் பொருளில்லை. பார்ப்பனர் இந்தியா முழுவதும்—ஏன் உலக முழுவதுமே

உள்ளனர். வேறு வேறு மொழிகள் பேசிக்கொண்டும், வேறு வேறு உடைகள் உடுத்துக் கொண்டும், வேறு வேறு கொள்கைகளைக் கூறிக் கொண்டும் இருந்தாலும் அவர்களின் உள்நோக்கமெல்லாம் பிறரைத் தங்கள் காலடிகளில் கிடத்திக் கொள்ளவேண்டும் என்பதே! இங்கு வந்து ஒரு பார்ப்பான் 'தமிழ் சமற்கிருதத்திலிருந்து தோன்றியதென் பான். உருசியாவுக்குப் போய் ஒரு பார்ப்பான் 'உருசிய மொழியில் சமற்கிருதச் சொற்களும் இருக்கின்றன பார்த்தீர்களா?' என்பான். இப்படி உலகமெங்குப் பரவி வாய்ப்பு கிடைத்தவிடங்களிலெல்லாம் தங்கள் வால்களை ஆட்டிக் காட்டும் இனம் பார்ப்பன இனம். திரு. இராசாசி அந்த இனத்தின் தனிப் பெருந்தலைவர் அவர் பேச்சுகளையும் உளக் குறிப்புகளையும் உலகெங்கணும் எடுத்துச்செல்ல பல்லாயிரக் கணக்கான வாய்ப்பு வகைகளை அவர்களே உண்டாக்கிக் கொண்டுள்ள னர். அவ்வினத்தால் உலகில் ஏற்பட்ட மாறுதல்களோ எண்ணிலடங் காதவையாகும். வீழ்ந்த அரசுகள் பல! வீழ்த்தப்பெற்ற பேரரசர்கள் பலர். உலகத்தின் மாபெரும் மறவன் அலெக்சாந்தரும் அவ்வினத் தின் நச்சுச் சூழ்ச்சியால் வீழ்த்தப்பட்டான் எனின், இவ் வடவர்கள் எம் மூலை? அவர்களால் மூவாயிரம் ஆண்டு ஊடுருவலாலும், போராட் டத்தாலும் முற்றும் வீழ்த்தப்படாத ஓரினம் உலகில் உண்டென்றால் அது தமிழினமே! இதற்குத் தமிழினத்து அவ்வப்பொழுது தோன்றிய பெருந்தலைவர்களும் பேரறிஞர்களுமே காரணம்! ஆரியர்கள் குடம் குட மாகக் கொட்டிய நச்சுக்குந் திரிந்திடாத உயர்தனிப்பால் தமிழ் மொழியே! இதை நாம் உணர்வாலோ, தமிழ்மேல் வைத்த பற்றாலோ, தமிழர்மேல் வைத்த கரிசனத்தாலோ கூறவில்லை. மெய்யுணர்வோடு, பகுத்தறிவுக் கண்கொண்டு, அரசியல் குமுகாயப் பாடங்கொண்டு கூறும் உண்மைக் கருத்துகளாகும்.

எனவே இந்தியநாட்டு அரசியலில் திரு. இராசாசி அவர்கள் **'ஓர் அரசியல் நரி'** என்றும், எவர் ஆட்சி மேடை ஏறினும் அவர் ஆட்சியைக் கவிழ்ப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார் என் றும், தமக்கும் தம் இனத்திற்கும் தக்காரையே அவர் ஆட்சியில் அமர்த்த விரும்புவர் என்றும், அல்லது அப்படி அமர்ந்தவரைத் தமக் கும் தம் இனத்திற்கும் நலஞ் செய்வதற்கே ஆட்படுத்துவர் என்றும், இவ்விடர்ப்பாடுகளிலும் இடிபாடுகளிலும் தமிழர் சிக்கிக் கொள்ளாமல் விழிப்புடன் இருப்பதே நன்று என்றும் அறிந்துகொள்க. இனி, குடி யாட்சி யமைப்பில் நாம் இன்றுள்ள காரணத்தால், அடுத்துவரும் பொதுத்தேர்தலில் என்ன செய்ய வேண்டும் என்பதுபற்றி அடுத்த இதழில் ஆராய்வோம்.

—பெருஞ்சித்திரன்.

சிறுபாவியம்

மணல் திட்டு!

துரை-மாணிக்கம்

(மாந்தர் உள்ளங்களில் சிலபொழுது அறிவழுத்தம் குறைந்து நிற்கும். அக்கால் அங்குப் புல்லிய எண்ணங்கள் தோன்றி மேடிட்டு நிற்கும். ஆனால் அவை ஆற்றிடையில் ஏற்படும் மணல் திட்டுகளைப் போன்றவையே! அடுத்துவரும் அறிவு வெள்ளத்தால் அவை கரைந்து போகும் தன்மையன. ஆனால் அவ் விடைப்பொழுதில் அம் மணல் மேடுகளின் தோற்றமும் வலிவும் அவை தோன்றிய மாந்தரின் உள்ள நீரோட்டங்களை எவ்வளவு அலைக்கழிக்கின்றன!)

காலையில் எழுந்தாள் கயல்விழி;
வேலையில் எண்ணம் வீழாது அலைந்தது!
கால்கள் இரும்பாய்க் கனத்தன; உள்ளம்
நூலிலாப் பட்டமாய்க் கட்டின்றிப் பறந்தது!
யார்க்கும் தொடர்பிலா நினைவுகள் மொய்த்தன!
பார்க்கும் பொருள்மேல் கண்கள் பதிந்தன!
கேட்கும் ஒலிகளோ தொடர்பின்றிக் கேட்டன!
தோள்கள் துவண்டன; மார்பகம் தொய்ந்தது;
நின்றுகொண் டிருந்தது நிலைக்கண் ணாடிமுன்
என்றவள் உணர அரைமணி சென்றது!

காலை நிலாவென முகம்வெளிர்ந் திருந்தது!
மாலைக் கதிரவன் போல விழிகளும்,
வற்றிக் காய்ந்த சருகுபோல் இதழ்களும்,
அழுகிய பழத்தோல் எனும்படி கன்னமும்,
இருந்தன கண்டாள்; இருளகம் கண்டாள்!
நெற்றித் துண்டம் நெருப்பாய்க் கனன்றது!
ஒற்றிய கையோ ஒடிந்த தாமரைத்
தண்டுபோல் மடியில் துவண்டு விழுந்தது!

கயல்விழி உள்ளமோ கயிறுமேல் நடக்கும்
கழைக்கூத் தாடியின் கைக்கழி போல,
மேலும் கீழுமாய் இடமும் வலமுமாய்ச்
சுற்றிச் சுழன்று கொண்டே இருந்தது.
வெற்று வெளியை வெறித்து நோக்கினாள்.
கருநீ லத்து வானிலே மிதக்கும்
ஒருகோடி முகில்களும் இவள்உள் ளத்தே
வந்து மொய்த்து வட்டமிட் டிருந்தன !
முந்தைநாள் நிகழ்ச்சியோ முட்டமிட் டிருந்தது !

அவளோ மணந்த ஆயிழை ! பேதை !
துவளா நெஞ்சினள் ! அன்பின் தொகுப்பு !
புதுவைப் பாவலர் குடும்ப விளக்கு !
புதுமைப் பாவையின் அழகுப் பொலிவு !
குளிர்ப்பூஞ் சோலை ! கற்பின் கொழுந்து !
வெளிரோ டாத நீலவான் விரிவு !
கலங்கிலா நன்னீர்! ஆயினும் குழவியின்
இளங்கை வருடா மார்பினள் அவளே !
மணம்நடந்(து) ஏழரை ஆண்டுகள் மடிந்தன!
எனினும் மகப்பே றில்லா திருந்தாள் !
தாய்மைக் கேங்கித் தவித்தது அவள்மனம்!
சேய்முகங் காணத் துடித்தது அவள்விழி !
மகவு புரளா மடியின ளாகிய
அகவாழ் வவட்கே அனற்புழு வாழ்க்கை !

மனத்திற் குகந்த மணாளன் எனினும்
இனத்திற் கோருயிர் ஈகிலாத் தன்மையால்
ஏதோ ஒருகுறை இவளுளத் திருந்தது !
ஏதோ ஒருதுயர் இவளைத் தேய்த்தது;
உடல்நலந் தேய உள்ளமும் தேய்ந்தது;
கடல்போல் வாழ்வில் கலமிலா திருந்தாள் !
இவளருங் கணவன் வாணிக நோக்கன் !
இவள்உளக் கூவல் இணைந்தறி கல்லான் !
பிள்ளை ஆவலை வாணிகப் பிணிப்பின்

கொள்ளை ஊதியக் கொழுமையால் மறந்தான் !
வாணிகத் தொடர்பால் வெளியூர் வாழ்க்கை
பேணிக் கொள்ளும் பெற்றியோன் ஆனன்.
இம்முறை வெளிநா டேகி இருந்தான்;
மும்முறை திங்கள் முழுமை அடைந்தது !

கணவன் வெளியூர் இருக்கும் பொழுதெலாம்
மணந்தரா வாழ்வைக் கயல்விழி நினைப்பாள் !
பெண்ணின் அன்பு பெரியதே ! எனினும்
பெண்ணின் பேதைமை நெஞ்சமும் பெரியதே !
அழல்எனும் பிரிவை ஆற்றிக் கொள்ளும்
விறல்அவள் உணர்வில் விளைவதே ஆயினும்
நேற்று நடந்த நிகழ்ச்சியோ கயல்விழி
ஊற்றெனும் நினைவிற்கு ஊறு விளைத்தது !
தேற்றிக் கொள்ள முனைந்தும் தோற்ருள் !
காற்றில் நெருப்பென எண்ணம் கனன்றது !

முத்தன் என்னும் முன்வீட்டு இளைஞன்
ஒத்துப் பழகிய பழக்கம் முதிர்ந்தே
மாற்றுதற் கின்றி மனத்தை அலைத்தது !
நேற்று மாலையில் இளையோன் வந்தான்.
கணவன் மடலைப் படித்துக் காட்டினன்.
இனுமொரு மாதம் இருந்து வருவதாய்
வந்த செய்திக்கு இருவரும் வருந்தினர்.
வருத்தம் வளர்ந்ததும் இரக்கமாய் மலர்ந்தே
உறுத்தும் இளமையால் அன்பெனக் காய்த்துக்
கயல்விழி பிரிவுக்குக் களங்கமாய்க் கனிந்தது !
மயலுறும் நெஞ்சம் அறிவை மறைக்கவே,
எண்ண வாய்க்கால் இருவர் நினைவையும்
ஒன்ருய் இணைத்தது ! நினைவுநீர் வலுத்தது !
இருப்பினும் அச்சம் இருவர்க்கும் இருந்ததால்
விருப்பக் குறிப்பொடு விலகிச் சென்றனர்
சூழலால் பெய்த எண்ணத் தூறலில்
காலூன் றிற்று கயமைக் காளான் !

மறுநாள் மாலை இருவரும் பிணைவதாய்
ஒருநூறு சொற்களில் உளறிக் கொட்டினர்!
நடக்க விருந்த நச்சு நிகழ்ச்சியைக்
கடக்கக் கயல்விழி அஞ்சி அஞ்சியே
இரவு முழுவதும் உறங்காது இருந்தாள்!
உறவின் நினைவுகள் ஒழுங்கினார்க் கெங்ஙன்
நறவு பிலிற்றி நலஞ்செய் யும்மோ
அங்ஙனே ஒழுங்கிலார்க் கந்த நினைவுகள்
நஞ்சு பிலிற்றி நலங்கொலல் இயற்கை!

மயல்மேய் அறிவொடும் மனஞ்செல் நினைவொடும்
கயல்விழி காற்றிடைத் துரும்பெனச் சுழன்றாள்.
மாலை நடந்திடும் நிகழ்ச்சியின் நினைவால்
ஆலையில் இட்ட கரும்பாய்த் துவண்டாள்!
பல்லைத் துலக்குவாள்; நெஞ்சம் துலக்கிலள்!
வெள்வாய் அலம்புவள்; மனக்கறை அலசிலள்!
அருள்தோய் உருவமுன் நின்றனள்; அஞ்சிலள்!
இருள்முகம் கழுவுவள்; இழிவுளம் கழுவிலள்!
குழல்நெய் வாருவாள்; குப்பைஉள் வாரிலள்!
தழல்முன் அமருவாள்! உளத்தணல் அவிக்கிலள்;
ஊணெடுத் துண்ணுவாள்; அறிவூண் உண்கிலள்!
மாண்உடை பூணுவாள்; மனத்துடை கலைந்தனள்!
வளையும் மானமும் அறிவும் வாய்ந்தவள்
இளையோன் எண்ணினாள்; கணவனை எண்ணிலள்!
மயங்கினள்; மருண்டனள்; மனமிக இருண்டனள்;
தயங்கினள்; வெருண்டனள்; தணலிடைப் புழுவினள்;
சாம்பினள்; தேம்பினள்; சாறிலள்; வீறிலள்;
கூம்பினள்; கூசினள்; குறைபடு மாசினள்!
எழுந்தனள்; நடந்தனள்; இளமைகொல் நினைவினள்;
விழுந்தனள்; புரண்டனள்; வெயர்த்தனள்; அயர்ந்தனள்;
இன்பிலா இன்பம் எதிர்கொள முனைந்தவள்
துன்பினார் துன்பம் முழுவதும் தோய்ந்தனள்!
மாலையும் வந்தது! மங்கையும் மயங்கினள்!
வாலைக் குமரனின் வரவெதிர் பார்க்கையில்

பக்கத்து வீட்டின் பாவை ஒருத்தி
'அக்கா' என்றே அழைத்த வாறும்
உள்ளே வந்தாள் ; வந்தவள் கயல்விழி
வெள்ளை வெளேரென் றிருப்பதைக் கண்டு,
மனமிக வருந்தி, மணாளனின் பிரிவே
கனல்போல் இவளை வாட்டிய தென்று
கருதி உளத்தைத் தேற்றப் புகுந்தே
இறுதியில் இப்படி இயம்பத் தொடங்கினள்.

"கடல்மேல் சென்ற கணவனை எண்ணி,
உடலும் உயிரும் வருந்துகின் றீர்கள் !
அவர்மேல் எத்துணை அன்புங் கட்கே !
எவர்தாம் இப்படிக் கணவனை நினைந்து
தோலும் எலும்புமாய்த் தோற்ற மளிப்பார் ?
நாளுக்கு நாளும் இளைத்தீர் அக்கா !
கணவன் மனைவியர் காதல் என்றால்
உணவும் மறப்பதா ? உறக்கமும் தவிர்ப்பதா ?
உங்களைப் பற்றி ஊரில் யாவரும்
எப்படிப் பெருமையாய் இயம்பினர் ; தெரியுமா ?
அப்படிப் பேசுதல் அன்றோ பெருமை !
கற்பின் விளக்கே ! காதலின் செல்வீ !
பொற்பின் பூணே ! பூவையர் அரசே !
உங்கட்கு என்றன் உளமகிழ் வாழ்த்து !
திங்கள் ஒன்றில் திரும்புவர் அதனால்
வருத்தம் கொள்ளாது இருங்கள்" என்றே
திருத்த மொழிகளைக் கூறினள் அவளே !

பொலபொல வென்றே பொழிந்த உரைபோய்
வெலவெலத் திருந்தவள் செவியினிற் பட்டதும்
உள்ளம் எழுந்ததே ! உறக்கம் கலைந்தது !
கள்ளம் அகன்றது ! கற்பும் உயிர்த்தது !
தன்னெறி நம்பி ஊர்தனக் கிட்ட
நற்பெயர் தன்னை நினைத்துப் பார்த்ததும்,
அழுந்திக் கிடந்த உள்ளுணர் வெழுந்தே
புழுங்கிக் கிடந்த புரையை அவித்தது!

நலிந்திடப் போகும் நங்கையை ஊரார்
புகழ்ந்த கூற்றினுல் நாணம் புகுந்தது !
புகுந்த நாணம் புன்மையைச் சுட்டது !
தகுந்தவ ளென்ற தகுதியைத் தந்தது !
ஊரார் உரைத்த உரைக்குத் தக்களாய்
நேர்வழி நடக்கும் நினைவு வளர்ந்ததும்
உறங்கிய அறிவும் ஊற்றுக் கொண்டது !
கிறங்கிய நிலைபோய் கயல்விழி கிளர்ந்தாள் !
மூண்ட அறிவால் முன்னுள்ள பாவையின்
கீண்ட நிலாப்பிறை நெற்றியை நீவி
முத்தம் பொழிந்தாள் ; முறுவல் மலர்ந்தாள் !
புத்தம் புதிய உணர்வொடும் அப்பெண்
சென்றதும், கயல்விழி சரேலென எழுந்து
கிடுகிடு வென்றே கிணற்றுக் கோடி
விடுவிடு வென்று பெரிய வாளியால்
இருபது வாளித் தண்ணீர் இறைத்துக்
குளிரக் குளிரத் தலையில் கொட்டினுள்.
உடல்குளிர்ந் ததுபோல் உளமும் குளிர்ந்தது !
கடல்போல் நெஞ்சினுல் கணவனை வாழ்த்தினுள் !

குளித்து முழுகிக் குழல்நீர் சொட்ட
வெளிர்நிறச் சீரை விரித்துடல் உடுத்து
மஞ்சள் நெற்றியில் செஞ்சாந் தணிந்தே
விஞ்சும் அன்பினுல் கணவனின் அறைபோய்
அன்னவன் புகைப்படம் அன்பினுல் அணைத் "தென்
மன்னவ ! நீயும் வாழ்கநூ ருண்டே"
என்றே வாழ்த்தி எதிரறை வந்தாள் !
எதிர்வீட் டிளையோன் இவள்முன் நின்ருன் !
அதிர்வெதும் இன்றி அன்னை அன்பொடு
"தம்பி, வரு"கெனத் தணிவொடு கூறினுள்.
செம்பொன் மணியிழை தாய்மைச் செவ்வியால்
அன்போ டழைத்த அவ்வுரை, அவன்பால்
முன்னர் இருந்த இருள்நிலை மாற்றிப்
பொய்யுணர் வெழுச்சியைப் புதைத்தது! ஆங்கே
மெய்யுணர் வெழுந்தது ; மிளிர்ந்தது தூய்மையே !

அச்சாகு நூலெல்லாம் நூலாமோ? ஆங்கு சிலர்
மெச்சியுரை செய்வதனால் மேலாமோ? – முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோறாய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு !

"தமிழ் ஒளியின் கவிதைகள்"

தொகுத்தவர்: செ. து. சஞ்சீவி.

கிடைக்குமிடம்: 59. பெருவழி, சென்னை-1.

விலை உருபா: மூன்று.

மக்கள் பலதிறத்தினர்; போக்கினர்; பல்வேறு ஒழுக்கப் படி நிலையினர். அவரவர் உள்ளத்தால் வாழும் வாழ்க்கையே அவரவர்க்குப் புகழையோ இகழையோ அளிப்பது. இல்லாத சிறப்பை இருப்பதாகக் கூறி அவர்க்குரிய இடத்தினும் உயர்ந்த இடத்தை அவரடைய நினைப்பதோ, பிறர் அவர்க்களிக்க நினைப்பதோ பொய்மையின் பாற்படுவ வாகும். உலகியலுக்குப் பொருந்த வாழும் ஒருவனை அருஞ்சான்றோன் என்று பொதுவாகப் புகழ்வதில்லை. பத்தாம் வகுப்பு படித்தவனை இவன் முதுகலை தேறியவன் என்றும் மொழிவதில்லை. ஆயினும், இலக்கியத் துறையில் மட்டும், பொதுநிலைகளையே தாண்டியிராத ஒருவனைப் புலமை முற்றுந் துறைபோகிய பெரும்புலவன் என்று புகழ்வது நம் தமிழகத்துக்கேயுரிய ஒரு பேரிழுக்குநிலை போலும்! மேனாட்டு இலக்கிய நூல் ஒன்றைப் புரட்டினால் அதன் முன்னுரை அல்லது பதிப்புரையிலேயே ஆசிரியனின் உண்மையான நிறை குறைகளைப் பற்றி அறிந்து கொள்ளலாம். பாடலாயின் அதன் உண்மையான தரம் முன்னுரையிலேயே மதிப்பிடப் பெற்றுவிடுகின்றது. "இவரின் ஆற்றல் இத்துணை அளவினதே. இவர்தம் பாடல்கள் இன்னின்ன குறைகளை உடையன. இந்நூல் இலக்கிய வரிசையின் இவ்விடத்தில் வைத்தெண்ணத் தக்கது" என்று ஒளிவு மறைவின்றி உண்மை கூறி நூலை மக்கள் மன்றத்தின் முன் வைக்கும் பழக்கம் அவர்கட்கிருக்கின்றது.

உண்மையான முயற்சியை அவர்கள் பாராட்டுக்குரியதாகக் கருதுகின்றனர். இந்நூலுக்கு பர். மு. வ. எழுதியுள்ள முன்னுரை வெறும் போலிப் புகழ்ச்சி. ஒரு பேராசிரியரின் நிலைக்கு வெட்கந்தரத் தக்கது. பதிப்புரையிலும் தமிழ்ஒளி அளவிறந்து பாராட்டப் பெற்றுள்ளார்.

பல்வகைச் சந்தங்களிற் பாடல் எழுதுவது புலமைக்குக் கட்டளைக் கல் ஆகிவிடாது. கருத்திலோ அழகிலோ குறிப்பிடத்தக்க எவையும் இந் நூலில் இல்லை. பொதுநிலையான பாடல்கள். தமிழ்ஒளியின் நல்லுணர்வும் (அதுவும் கலப்பில்லாதில்லை) எழுச்சியும் துடிப்பும் பாராட்டத்தக்கன. ஆனால் அவை சீர்மைசான்ற பாடல்களாகக் கனியாமல் கீழ்ப்படிகளிலேயே பாடல்களை நிறுத்தியிருக்கின்றன. பொது நிலையான எண்ணங்களும் சுவையற்ற மனப் போக்குகளுமே காணக் கிடக்கின்றன. தனிப்போக்கான எண்ணங்கள், உணர்வுகளாக உரு மாற்றம் பெறுகையில்தான் உயர்ந்த பாட்டு பிறக்கின்றது. தமிழ் ஒளியின் பாடல்கள் தனிப் போக்காகவே நின்றுவிடுகின்றன.

நூலின் நடையும், இருபத்தைந்து விழுக்காட்டுக்குமேல் வேண்டாத வடசொற்கள் மலிந்த கலப்பு நடை. தமிழின் உண்மை உயிர்ப்பினைத் தமிழ்ஒளி புரிந்து கொண்டிருந்தால் இத் தாழ்ந்த கலப்பு நடை எழுந்திருக்காது.

தமிழ்ஒளிமேல் பிழைபில்லை அவர் தம்மளவில், தம் அறிவு நிலைக் கேற்ப எண்ணினர்! எழுதினர்; சென்று மறைந்தார். ஆனால் அவரை உள்ளபடி காட்டாமல் அவருக்குரிய புகழைத் தராமல், தமிழுக்கே ஒளியூட்டுபவர் என்றும், கம்பனுக்குப்பின் தோன்றிய இலக்கிய மறுமலர்ச்சியாளர் என்றும், தமிழ்ப்பாட்டு வானில் மங்காத விண்மீன் என்றும் பொய்கூறி மக்களை ஏய்க்கின்றனரே அவர்கள் மேல்தான் பிழை.

'கல்லாடன்'

ஒரு நற்செய்தி

இலக்கியத் துறையில் ஒரு புதிய படைப்பு!

துரை-மாணிக்கம் எழுதிய

"நூறாசிரியம்"

[விரிவுரையுடன்]

சுவடி 5. ஓலை 1 முதல் தொடர்ந்து வெளிவரும்.
உடனே தென்மொழியின் உறுப்பினராகுங்கள்.

நூற்சுருக்கம்

தொடர் மூன்று

உலகின் முதற் செம்மொழி

(The primary classical language of the world)

மொழிநூற் பேரறிஞர் பண்டித. புலவ, கலைத்தலைவர்
ஞா. தேவநேயப் பாவாணர் எழுதியது.

தமிழரின் பெருமையை மறைக்கும் சூழல்கள்:

1. தமிழரின் பிறந்தகமான இலெமூரியா கடலுள் மூழ்கியமை.
2. பழந்தமிழ் நூல்கள் அழிந்துபோனமையும், இருக்குந் தமிழ் நூல்கள் தவறாகப் பொருள் கொள்ளப்படுதலும்.
3. கழகக் காலத்துக்குப்பின் தமிழ்மொழி கலப்பெய்தியமை
4. உண்மைத் தமிழக வரலாற்று நூல்கள் ஒப்புக்கொள்ளப்படாமையும் பரவாமையும்.
5. பழந்தமிழ்க் கொள்கையினராகிய அறிஞர்கள் வேலையினின்று நீக்கப்படுதலும், அவர்தம் பணியைச் செய்ய ஏற்படும் தடைகளும்.
6. ஆரியக் குலப்பாகுபாட்டினால் ஏற்பட்டு நெடுங்காலமாக இருந்து வரும் குமுகாயத் தாழ்த்தல்களால் பெரும்பான்மையான தமிழர்கள் இன்று தம் நிலையினின்று இழிந்து கெட்டுப் போயிருத்தல்.
7. தமிழர் கல்வியிற் பிற்பட்டிருத்தல். நூற்றுக்கெண்பது பெயர்கள் எழுத்தறிவற்றிருத்தல்.
8. இந்துக்கள் என்றழைக்கப்படுவாரின் தொழுகைகள், கோவில் வழிபாடுகள், (வீட்டிலுள்ள சடங்குகள் உட்பட) வடமொழியிலோ வேதமொழியிலோ நிகழ்தல்.

9. வடமொழியாளர் அல்லும் பகலும் அயராது தம் மொழியை உயர்த்திப் பேசியும் எழுதியும் (தவறான) கருத்துகளைப் பரப்புதலும், தமிழர்கள் அவற்றை எதிர்க்காமல் ஊமையாயிருத்தலும்.

10. பழந்தமிழர்தம் கலைகளும் அறிவியல்களும் வடமொழியிற் பெயர்க்கப்பட்டும் மேற்கொள்ளப்பட்டும் இருத்தல்; தமிழின் முதல் நூற்கள் அனைத்தும் அழிந்தமையால், அவற்றின் வழி நூற்களான வடமொழி நூற்களே முதனூற்களாகக்கருதப்படுதல்.

11. சமற்கிருதவாணர் கல்வியில் முன்னேறிப் பொதுவாழ்க்கையின் அனைத்துத்துறைகளையும் பற்றி ஆண்டு கொண்டிருத்தல்.

12. சமற்கிருதவாணர் எங்கும் "நீக்கமற நிறைந்"திருத்தலும், சமற்கிருத ஆராய்ச்சிகள் உலகெங்கும் மேற்கொள்ளப்படுதலும் தமிழை மறைத்தற்குப் பெருங் காரணமாதல்.

13. இன்றையத் தமிழருள் ஏறத்தாழ எல்லாரும் சமற்கிருதப் பெயர்களையே தாங்கியிருத்தல்

14. தமிழகம் இந்தியத்துணைக்கண்டத்தின் தென்கோடியில் அமைந்திருத்தலால், வெளிநாட்டாளரின் கவனத்தை வடமொழியைப் போல் ஈர்ப்பதற்கு உகந்த சூழல் இல்லாமை.

15. திராவிட இனத்தவரான பிறரெல்லாரும் முற்றும் ஆரியப் பண்பாட்டை மேற்கொண்டுவிடவே, தமிழினம் மிகச் சிறுபான்மையாகச் சுருங்கியிருத்தல்.

கால்டுவெல் செய்த பிழைகள்:

(1) சேர சோழ பாண்டியர் என்ற சொல் மூவேந்தரின்கீழ் வாழ்ந்த மக்களினத்தையே குறிக்கும் என்று கால்டுவெல் கருதினார். இது பிழையாகும்.

(2) கி. மு. 5–ஆம் நூற்றுண்டிலிருந்து கி. பி. 4–ஆம் நூற்றுண்டு வரை நிலவியிருந்த மூன்றும் தமிழ்க்கழகமும், கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டினதான 'சமண சங்கமும்' ஒன்றே என அவர் மயங்கினார்.

(3) முதற்சொல்லை வழிச்சொல்லாகவும் வழிச்சொல்லை முதற்சொல்லாகவும் அவர் கொண்டுள்ளார். திராவிடம் தமிழாயிற்றென்றும், 'லோகமே''உலக'மாயிற்றென்றும், 'ராஜா'வே'அரசன்'என்றும், 'ஸ்ரீ' 'திரு' வாயிற்றென்றும்,'சகஸ்ரம்' 'ஆயிர'மாயிற்றென்றும் அவர் தலைகீழாகக் கொண்டுள்ளார்.

(4) ஆரியர்க்கு முந்திய திராவிட நாகரிகத்தைப் பற்றிய அவர் மதிப்பீடு மிகக் குறைவாயுள்ளது. திராவிடமொழியியல் ஆராய்வாளர் என்ற அவர் தகுதியையே சற்றுக் குறைப்பதாக உள்ளன அவர் கூறியுள்ள கருத்துகள். தமிழர் கடல் கடந்து சென்றதே இல்லை என்று அவர் கூறியுள்ளமை ஒன்றே அவர் செய்துள்ள பிழைக்குப் போதிய சான்றாகும். தமிழர்தம் கடல் வாணிகத்துக்கும், கடல்கடந்த வாழ்க்கைக்கும் சான்று இல்லை? 'மதுரை' போன்ற பல இடப்பெயர்களும் சுமத்ரா (சுமதுரை) போர்னியோ (பொருநை) மலையா-(மலையம்) போன்ற நாட்டுப் பெயர்களும் தமிழரின் கடல்கடந்த தொடர்புகளைக் காட்டும்.

கால்டுவெல் மேற் பிழையில்லை. அவர் கழக இலக்கியத்தை அறிந்தவரல்லர். தமிழ்-எதிர்ப்பாளர்களான தமிழக வரலாற்றாசிரியர்கள் கால்டுவெலைத் தங்கள் கூற்றுக்கு அடிப்படையாகக் கொள்வதுதான் பிழை.

பழந்தமிழர் ஏழு கோள்களுள் (அறிவன், காரி ஆகிய) இரண்டினை அறியார் என்று கால்டுவெல் கூறியுள்ளது தமிழர்க்கு இழுக்குத் தருவதாக அமைகின்றது. ஞாயிறு, திங்கள், செவ்வாய், அறிவன், வியாழன், வெள்ளி, காரி ஆகிய ஏழு கோள்களைக் கண்டு பிடித்தும், இவற்றின் பெயரால் ஏழு நாட்களைக் கிழமையாக்கியதும் பழந்தமிழர்களே! வானநூலை முதன் முதல் அறிந்தவர்களும் அவர்களே! தமிழ்ப் பெயர்களைப் பிராமணர் சமற்கிருதமாக மாற்றிக் கொண்டதன் காரணமாக 'அறிவன்' 'காரி' என்ற இரு தமிழ்ப் பெயர்களும் 'புதன்', 'சனி' என்றாயின.

தமிழ்நெடுங்கணக்கு தேவநாகரியினின்று பெற்றுக்கொண்டதே என்று கால்டுவெல் கருதினார். இது பிழை. தமிழே மாந்தன் முதன் முதல், அறிந்த நெடுங்கணக்காகும். தமிழ் எழுத்துகளின் எளிய

(24ஆம் பக்கம் பார்க்க)

இலக்கியம்

இயற்கை யாற்றுப்படை

ம. இலெ. தங்கப்பா.

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

முன்னுரை

முற் கூறப்பெற்ற போலிகளும் ஓரளவுக்கு இயற்கையைப்பற்றி எழுதியுள்ளனரே என்னலாம். புலவன் என்று பெயர்பெற வேண்டுமென்றால் ஓரளவு இயற்கையைப்பற்றியும் யாதாவது கூறவேண்டுமே என்பதற்காக, மயில் ஆடுகிறது, குயில் கூவுகிறது, நிலவைக்கண்டு அல்லி மலர்கிறது (நிலவில் அல்லி மலர்வதில்லை) என்பதுபோல் சில புளித்துப்போன இயற்கை வண்ணனைகளை ஊறுகாய் மணத்துக்குச் சற்றுப் பெருங்காயம் சேர்த்துக் கொள்ளுவதுபோல இவர்கள் தங்கள் பாடல்களில் சேர்த்துக் கொள்ளுகின்றனர். மற்றப்படி இவர்கள் எழுதுவன எல்லாம் வறட்டுத்தனமான ஆண் பெண் உறவுச் செய்திகளும் போலித்தனமான (தாமே உணராத) வறுமையின் கொடுமைச் செய்திகளும், அடிப்படையைத் தெரிந்துகொள்ளாத குமுகாயச் சீர்திருத்தச் செய்திகளும், குருட்டுத்தனமான அரசியல் ஆர்ப்பாட்டச் செய்திகளுமேயாகும். இவ்வுணர்வுகள் போலியாக விருப்பதற்குக் காரணம், அவை இயற்கையில் வேரூன்றித்தழைக்காமையேயாகும்.

இவ்வாறு பொதுவாக அனைவர்க்கும், குறிப்பாகப் பாட்டுலகிற் புக எண்ணும் இளையோர்க்கும் இயற்கை ஈடுபாடு எத்துணை இன்றியமையாதது என்பது இதுவரை விளக்கப்பட்டது. இனி இந் நூலின் நடைபற்றிச் சில சொற்கள்: கழகக் கால நடை என்று ஒன்றிருப்பதாகவும், அஃது இருப்புக் கடலைபோல், கடினமாக, -புரிந்து கொள்ள முடியாமல் இருப்பதாகவும், அஃது இக்காலத்துக்கு ஏலாததென்றும் சிலர்

பிதற்றித் திரிகின்றனர். எளியநடை வேண்டும் எளியநடை வேண்டும் என்றபேச்சு எப்பொழுதுபார்த்தாலும் நம்காதுகளைத்தொளைக்கின்றது. எளியநடை வேண்டவே வேண்டா என்றுநாம் கூறவரவில்லை. ஆனால் எளிய நடையன்று என்னுந் தலைக்கீட்டில் கழகக்கால நடையைக் கண்டு அஞ்சியோடும் அறிவிலிகளைக் கண்டு நமக்குச் சிரிப்பும், அந் நடையைக் கடிந்தொதுக்கும் ''காலமுன்னோடி''களைக்கண்டு சினமுமே எழுகின்றன. கழகக் கால நடையைக் கடின நடை என்று கருதுபவர்கள் மொழியையே புரிந்து கொள்ளாதவர் ஆவர். தமிழ் மட்டுமே அறிந்த ஒருவன் ஆங்கிலத்தில் உள்ள பாடல் ஒன்றைப் பார்த்து– அது மிக எளிய நடையில் அமைந்த குழந்தைப் பாடலாக இருப்பினும் - அது கடின நடையாயிருக்கின்றது; என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை என்று கூறினால் அக்கூற்றுக்கு என்ன பொருளோ, அதேபொருள்தான் கழகப் பாடல்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்பார் கூற்றுக்கும் உண்டு. அப்பாடல்களைப் புரிந்துகொள்ள முடியாதவன் தமிழ் அறியாதவன் ஆவான். ஏனெனில் கழகப் பாடல்களினும் மிக எளிய நடை வாய்ந்த சிறந்த பாடல்கள் இன்னும் எழுதப் பெறவில்லை.

உள்ளத்தின் கருத்தைச் சீரிய கூரிய சொற்களில் பளிங்குபோல் தெற்றெனப்பொருள் விளங்கும்படியாக(அஃதாவது பொருளை வேண்டுமென்றே சொற்சிக்கல்களில் மறைக்காமல்) எழுதுவதுதான் தெளிந்த எளிய நடை. கருத்தைத் தெளிவாக்காமல் குழப்புவதுதான் கடின நடை. கழகப் பாடல்களின் கருத்துத் தெளிவும், சொற்களின் வைப்பு முறை எளிமையும் எத்துணை வியந்து பாராட்டத் தக்கன!

எளியநடை என்பதற்கு இவ்வாறு சரியாகப் பொருள்கொள்ளாமல் பொதுமக்களும் (அஃதாவது கல்லாதவரும்)புரிந்துகொள்ளும் படியான நடையே எளியநடை என்று தவறாகப் பொருள்கொண்டு இலக்கியம் அனைத்தும் அந்த நடையிலேயே அமைதல் வேண்டும் என்று இன்று பெரும்பாலோர் கதைக்கின்றனர். அவர்கட்கு இது கூறுவோம். பொது மக்களும் புரிந்து கொள்ளத் தக்கவாறு ஒருசிலவற்றை எழுதத்தான் வேண்டும். இதிற்பிழையில்லை. ஆனால் எல்லா இலக்கியத்தையும்– இப்படித்தான் எழுதவேண்டும் என்பதுதான் பிழையாகும். பொதுமக்கட்கு அறிவு கொளுத்த, எழுச்சியூட்ட, அவர்களின் உணர்வைத் தூண்ட, (எழுத்து அவர்கள் உள்ளத்தில் சற்றும் முயற்சியின்றிப்

பதியுமாறு) இலக்கியம் பயன்படுகின்றது. ஆனால் இலக்கியத்தின் வேலை அதோடு நின்று விடுவதில்லையே! மக்கட்கு உணர்வெழுச்சியூட்ட வேண்டுவதுமட்டுமல்லாது, அவர்கள் உள்ளங்களைச் செப்பஞ்செய்யவும், சுவையுணர்வைப் பெருக்கவும், நுண்ணிய செய்திகளை அவர்கட்குணர்த்தவும் ஆழ்ந்த உண்மைகளை அவர்கட்குக் கூறவும் வேண்டுமே! பொருளறிவையோ செய்தி அறிவையோ மட்டும் மக்கட்குத் தராமல், மொழியறிவையும் இலக்கிய அழகையும் குழைத்துத் தருவதும் புலவனின் கடமையாயிற்றே!

இற்றைக் கருவி நாகரிக ஆரவாரப் பெருக்கத்தால் பிறவற்றைப் போலவே இலக்கியமும் புறநலம் கருதியே பயன் படுத்தப் பெறும் ஒரு தாழ் நிலையை அடைந்து வருகின்றது. இது காலத்துக்கேற்ப இலக்கியத்திற் கிளைத்துள்ள ஒரு துணைப்பயன் என்பதை ஒப்புக்கொள்ளினும், அதனால், இலக்கியம் அகப்பயன் விளைக்கும் தன் உள்ளுயிர்ப்பையே இழந்து போதல் வேண்டும் எனக்கருதுவது எத்துணை மடைமையின் பாற்பட்டது! இவ்வாறு அகப்பயன் விளைக்கும் பழைய இலக்கியங்களை அவற்றின் அருமை பெருமை உணராமல் புறக்கணிப்பதும், அத்தகைய அகநிலை இலக்கியங்களை இக்காலத்து எழுதப்புகுந்தால் அவை காலத்துக் கொவ்வாதன என்று கடிவதும் அதனினும் எத்துணை முழுமடமை!

செய்தித் தாட்களில் இப்பொழுதெல்லாம் பகடிப்படங்கள் (cartoons) மிகுதியும் வருகின்றன. அரசினர் விளம்பரப் படங்களும் செய்திவிளக்க ஓவியங்களும் பொதுமக்கள் கண்ணிற்படுமிடமெல்லாம் நிறைந்துள்ளன. இவற்றை உணர எந்த ஓவிய நுணக்கமும் தேவை இல்லை. எல்லாமக்கட்கும் புரிவனவே இவை. ஆயினும் ஓவியக்கலை என்பது இப்படித்தான் இருக்க வேண்டும் என்றும், இவற்றையன்றி, மிக நுண்ணிய வண்ணவேறுபாடுகள் இழைந்தவும்; கற்பனை யழகும், கலை நுணுக்கமும் உள்ளுறைச் சிறப்பும் வாய்ந்தவுமான உயர்ந்த வண்ண ஓவியங்கள், —இரவிவர்மா, புதுவை. செகந்நாதன் போன்ற அருங்கலைஞரின் அழகிய படைப்புகள்-காலத்துக்கு ஒவ்வாதவை, மக்கட்குப் புரியாதவை, ஆதலின் அவை வேண்டப்படாதவை என்றும் கூறினால் அஃது எத்துணை பகடிக்குரியதாகப்படுகின்றது! இலக்கியத்தும் இதுபோன்றே என்று தெரிந்துகொள்ளல் வேண்டும்.

பண்பாடு என்பது செப்பமடைந்த நிலை. இலக்கியமோ, பண்பாட்டின் தலையாய கனிவு. ஆதலின் இலக்கியம் செப்பம் வாய்ந்த ஒரு கலையுருவமாகும். பொருளாழத்துக்கும், சொற்சிறப்புக்கும் கருத்துயர்வுக்கும் உணர்வுத் தூய்மைக்கும் மெய்ம்மைக் காட்சிக்கும் ஏற்ப இலக்கியத்தின் தரம் உயர்ந்து செப்பம் எய்துகின்றது. ஆதலின் உயர்ந்த இலக்கியம் இத்தனைத் தன்மைகளையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். கழக இலக்கியங்கள் இத்தன்மையனவாகும். காலம் மாற மாறக் கருத்து மாறும் என்பர். கருத்துகள் பிழைநீங்கிச் செப்பம் எய்துதலையே இவ்வாறு குறித்தனரேயன்றிச் சிதைவுகளையோ வழுநிலைகளையோ மாறுதல்கள் எனறு சான்றோர் குறித்தாரல்லர். அடிப்படை உண்மைகள் என்றும் மாறுவன அல்ல. செப்பநிலையும் என்றைக்கும் பொதுவே. காலப்போக்கில் ஏற்பட்ட பல கேடுகளால் மக்களின் அறிவும் உணர்வும் கெட்டுத் தாழ்நிலை எய்திவிட்டமையால், அதனையே மாறுதல் எனக்கொண்டு, அவ்விழிநிலைக்கேற்ப இலக்கியமும் இழிந்துவிடல் வேண்டும் என்று கூச்சலிடுவோர் முழுமூடரேயாவர். பாரதிதாசன் போன்ற நல்லுணர்வாளர் தம்கால மக்கள் நலங்கருதி எழுதிய பிழையற்ற எளியபாடல்களை யாரும் ஒதுக்கிவிடவில்லை. ஆயினும் இலக்கியக்கலையின் பல்வேறு வண்ண வார்ப்பு வடிப்புகளையும் மனத்திற்கொண்டு கழக இலக்கியத்தின் செம்மாந்த நிலையினை மக்கட்குக் காட்ட முயன்றுலோ, அந்நிலைக்கு மக்களை உயர்த்த முயன்றுலோ, காலப்போக்கை மறந்து மக்களைப் பின்னேக்கி அழைத்துச் செல்வதாகக் கதறும் அறிவிலிகட்கு யாரும் செவிசாய்க்க வேண்டியதில்லை.

இத்தகைய எண்ணங்களால் உந்தப் பெற்று எழுந்ததுதான் இயற்கையாற்றுப்படை. (நகரவாழ்க்கையின் போலிமைகளான் இயற்கை யீடுபாடு குன்றி நலங்குறைந்தான் ஒருவற்கு, இயற்கை வளமும் கொழுமையும் நிறைந்த சிற்றூர் வாணன் ஒருவன் இயற்கையின் பல்வேறு எழில் நிலைகளைச் சொல்லி அவனை இயற்கையின்பால் ஆற்றுப் படுத்துவதாக அமைந்தது இந்நூல்.) பெரிதும் குறிஞ்சி, முல்லை மருதம், நெய்தல் ஆகிய நால்வகைநிலக் காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் இக் காலத்திற்கண்டவாறு விளக்கிச் செல்கின்றது. 'இயற்கையில்' உள்ளம் தோய்ந்தால் மிக நுண்ணிய காட்சிகளும் நம் மனத்திரையில் தெளிவாகப் புகைப்படம்போல் பதிந்து இன்பம் பிலிற்றி நிற்கின்றன. அத்தகைய நுண்ணிய காட்சிகள் ஒருவாறு நூல் முழுவதும் படம்

பிடிக்கப் பெற்றிருக்கின்றன. இக்காட்சிகள் கற்பனையாகவோ, பிற நூற்களில் உள்ளனவாகவோ இல்லாமல் அனைத்தும் நேரிற் கண்டு அமைத்தவையே. கழகக் கால ஆற்றுப்படை நூல்களின் சொற் செறிவையும் அழுத்தத்தையும் செதுக்கிவைத்த கற்படிமம் போன்ற வடிவ அழகையும் சுவைத்தோர் இயற்கையழகை வெளிப்படுத்த அவ் வகவல்யாப்பு எத்துணைச் சிறந்தது என்பதை உணர்வர். அவ்வகவல் யாப்பே இங்கும் கையாளப்பெற்றுள்ளது. அவ்வியாப்பின் நுண்மை திண்மை செறிவு செம்மை யியல்புகள் அவ்வளவு எளிதில் கைவரப் பெறுவன அல்ல. ஆயினும் அவற்றை நோக்கி இளைஞரின், குறிப் பாகப் பாடல் எழுதுவோரின் எண்ணங்களைத் திருப்புதல் வேண்டும், அப் பழங்காலச் செப்ப நிலையை மீண்டும் தமிழிலக்கியம் எய்திச் சிறத் தல் வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இந் நூல் தமிழரின் முன் வைக்கப் பெறுகின்றது.

(19ஆம் பக்கத்தொடர்ச்சி)

அமைப்பு முறையும், சமற்கிருதத்திலிருந்து அது மிக முரண்பட்டிருப் பதுமே இதற்குப் போதிய சான்றாகும். மொழிநூல் அடிப்படையில் இவ்வெளிமை முந்தியன்மையைக் குறிப்பதாகும். கிரந்த எழுத்துகள் தமிழ் எழுத்துகளினின்று அமைத்துக் கொண்டவையே. தேவநாகரி எழுத்துகளின் காலம் மிகப்பிந்தியதென்று வரலாற்றாசிரியர் கூறுவர். தமிழ் எழுத்துகளின் வரிசை முறை தமிழுக்குச் சிறப்புடையதாகும். பிற மேலை மொழிகளிலோ, ஆரிய, செமிடிக் மொழிகளிலோ இவ் வொழுங்கு முறையைக் காணல் இயலாது. சமற்கிருத நெடுங்கணக்கு தமிழைப் பின்பற்றி அமைந்ததே. பிற திராவிடமொழி நெடுங்கணக்கு களோ ஒன்பதாம் நூற்றாண்டளவில் ஒன்றன்பின் ஒன்றாகச் சமற்கிரு தத்தைப் பின்பற்றி அமைந்தனவாம்.

உயிரொலியில் மெய்யெழுத் தசை கலந்திருப்பதும், வல்லினம் மெல்லினம் அனைத்தையும் மூச்சொலியாகப் பலுக்குவதும், தமிழோ டொப்பிடுகையில் சமற்கிருத நெடுங்கணக்குப் பிந்தியதே என மொழி நூலடிப்படையில் நிறுவுதற்கு மேலும் சான்றுகளாம்.

(வளரும்)

இயற்கையாற்றுப் படை

ம. இலெ. தங்கப்பா.

நகர்உறை மகனே! நகர்உறை மகனே!
துகள்எழு தெருவின் புகையுமிழ் ஆலை,
அதிர்வொலி அடங்கா விதிர்விசை ஊர்தி
மரம்பயில் வறியா வறம்புகல் கவலை
பகல்திரி கள்வர் புகுமிருள் மறுகு
திரையொடு கூத்தியர் திறந்தபுன் மேனி
முடைநா றிழிபடம் மொய்த்தபல் சந்தி
பண்டப் பல்சுவைப் பகட்டுயர் ஆவணம்,
திண்டி வல்சியர் உண்டி மண்டகம்
நாடக மகளிர் ஆடும் அகன்களம்
பல்வகைப் பரத்தரும் உட்புகுந் துழக்கலின்
நல்வகை கெடுதிரைப் படம்பிடி கூடம்
நடமா டிழிசினர் படமா டரங்கம்
பரிவிடு சூதின் பொருள்பறி அரங்கொடு
காமக் களிவினை யாமக் கழகத்து
நகருறை மகனே! நகருறை மகனே!
நல்கூர் வுறினும் நலிபல மிகினும்
உள்வறங் காக்கும் வெள்ளுடை மினுக்கின்,
இளைத்த யாக்கை இடுகுகண், புலர்வாய்
நறுஞ்சுணம் அப்பிய பொலிவழி முகத்தின்,
இருள்துயில் புழுக்கில் எழுகுடி பகிரினும்
பிறர்துயர் வினவாப் பொறியறு வாழ்க்கையின்,
பொருணசைப் போட்டியின் நின்றமைந் தெண்ணா
இருணசை இயக்கத் திழுப்புறு கரிசின்
செயற்கையிற் புணர்த்த சிறுமை ஆடி
இயற்கைதோய் வறியா நடைப்பிணம் ஆகி
ஆறா இடும்பை உட்புகுந் தலைப்பப்
பானாட் கடையினும் கண்படை பெறாது
வெய்துயிர் முச்சின் விளக்கமும் தோன்றாப்
பைதல்நோய் உழக்கும் பாங்கினை ஆதலின்
நிற்கியா னுரைப்பல் உயிர்தரு மருந்தே!
எற்கும் உயிர்தந் தீங்குவப் பூட்டிய
அம்மருந் துண்ணல் வேண்டினை ஆயின்

எம்மொடும் வம்மோ,எம் இன்னியல் சீறூர் !
நீக்கற யாண்டும் நிறைகுநள் ஆயினும்
சீறூர் வைப்பிற் சிறந்தனள் வைகும்
மாறா இயற்கை வழிபடு வையினே
சின்னாள் வைகினுஞ் சிறக்குநின் வாழ்வே !
கள்ளமில் உணர்விற் கனியுநின் நெஞ்சே !
உள்ளுறும் உப்பிற் கவின்பெறும் உடலே !
சீறூர் எழில்நலம் திகழ்வகை கூறின்,
நீர்இருங் குட்டத்து நிறைவயல் உடுத்த
ஆர்மரக் காவின் அணிநடுப் பொலியும்.
சீந்தியுங் கோவையுஞ் செறிந்தடர் வேலிப்
பூந்துணர்க் கொன்றை உதிர்வீ மறுகின்
இரும்பனந் தோட்டின் தாழிறைக் கூரை
கரும்பின் பெருந்தாள் பொத்திய குளிர்மனை
வாயில்திறந்து வயின் வயின் விளங்கும்.
சேயிதழ்க் குறுமகார் கன்றுபின் திரிதரப்
பாய்சிறு பூசை ஞமலியொ டுகளும்.
நொச்சி வேலியின் குறுநுனை ஏறி
உச்சிச் சூட்டின் வாரணம் கூவும்.
புறங்கடை மாதுளை மென்சினைத் தூங்கும்
மகுடி யன்ன மணிபுரை பிஞ்சின்
மஞ்சள் மெல்லுடல் மாநுண் சிறுதலை
வாள்வாய்த் தேன்சிட் டுழ்மா றிருந்து
புறவிதழ் முரியா முனையிதழ் கோதும்.
அயற்புனல் பரந்த ஆழ்நீர்க் கூவல்
மயல்விழிப் பெண்டிர் குயின்மொழி சிலம்பும்.
கொடும்பூ வரசு குயிற்றிய வரிநிழல்
தாதுவீழ் மருங்கிற் குன்றெனக் குவித்த
யாணர் வைக்கோல் ஒழுகையிற் பொறுத்த
அயர்வுதீர் கிடக்கை அம்பகடு அசையிடும்.
உஎடமட் கலத்தின் வளைவாய் பதித்த
பேழ்வாய் அடுப்பிற் பெருஞ்சால் நிறீஇ
வஞ்சிநுண் சருகின் வளர்தீ மாட்டி
அம்புகை அயல்எழ அவிமணம் கமழக்

களைவிழி வெயர்நுதற் கலைகுழல் இளமகள்
புழுக்கிய முன்றில் புதுநெல் உணங்கல்
கருங்கட் காக்கை பதைப்பொடு கவரும்
உரற்கிடை மருங்கின் தொகுத்த பருத்தி
விரற்கொ டுளர்ந்தும் வித்துடன் களைந்தும்
இருந்துபஞ் செஃகும் நரை முதாட்டியின்
திருந்தா மயிர்அப் பனுவலின் மயங்கும்,
அரில்படப் படர்ந்த சுரைக்கொடி உணங்கல்
இடுமுட் காப்பின் இலங்குயர் பனைமேல்
வெண்தலை எருவை தன்துணை நரலும்.
புகர்ப்பூ எகினத் திவர்கொடி பின்னிய
வண்கிளை தூங்கும் பீரல் முதிர்காய்
வரியணில் தொற்றி விளையாட் டயரும்
கொல்லை முற்றிய எட்காய் கதுவிக்
கிள்ளைசேண் கறிக்கும் வேம்பொடு தலைஇய
தேமாந் தண்பூ நறுநிழல் அமர்ந்தே
காய்மாண் தெங்கின் இளநீர் பருகிய
நகைமுகச் சிருஅர் வகையில் தீம்பண்
வரகரி மழமகள் வரப்பின் வளர்த்திய
சிறுநுதற் குறுவிழிச் சேய் தா லாட்டும்
இன்னிழற் பொதும்பர் இருங்குயில் விட்டிசை
புன்வலை மகளிர் புதுத்தினை குறூஉம்
வள்ளைப் பாட்டின் இடையிடை இமிழும்.
இவ்வண மியன்ற ஈர்ந்தண் சீறூர்
செவ்விதின் நுகர்ந்து சிறக்குங் காலை,
பகற்கதிர் பரப்பி மாலைஏர் கொண்ட
அகனெடுஞ் சோலை அடைகுவம் எனினே,
கிளர்செவ் வொளியின் நிழல்தோ யும்மே!
பொலஞ்செய் தகட்டின் இலைபொலி யும்மே!
அங்கேழ் நறுமலர் அளியூ தும்மே!
செங்காற் புறவம் பெடைசே ரும்மே!
வெயில்மாந் தண்டுளிர் குயில்கோ தும்மே!
அயில்நுதி வளைவாய்க் கிளிபா டும்மே!
பாடுங் கிள்ளைக்குப் பாணி தூக்கி

ஆடும் பூஞ்சினை அணிலா டும்மே!
பொங்கர் அகன்று வயற்புறஞ் செலினே,
திங்கள் யாமத்துப் பனிப்பொழி தண்மையின்
விழியும் மெய்யும் நெஞ்சும் குளிரப்
பொழியும் பசுமைப் புரைதீர் காண்பின்
எழில்அர சோச்சும் பயன்கெழு இருக்கைச்
செந்நெல் பைங்கூழ் அசைவளி வருட,
மின்னிடை மாதர் மெய்சிலிர்த் தாங்கு
நாணுத் துவண்டு நடஞ்செயும் ஒருபால்.
பொலஞ்செய் வரியின் தீங்கழை ஈட்டம்
இனமயிற் கூத்தின் அசைவன ஒருபால்
முறஞ்செவி நீள்கைத் துயல்வர நின்ற
கவின்கண் கைம்மாக் கணங்கண் டன்ன
அகலிலை அசையவும் அருங்குலை தாழவும்
உகுமடல் வாழை வூங்கும் ஒருபால்.
துயிலடை வாகைத் தோய்கமழ் பரப்பும்
கவரியன்ன மென்துய்ச் செம் மலர்த்
தாதுண் வரியணில் தரைமிசைத் தாவிப்
பைம்புல் அரிசி சொறிக்கும் படப்பையின்
மொச்சையும் துவரையும் மொய்தழை கலித்துப்
பச்சிளஞ் சிறுகாய் விரிக்கும் ஒருபால்!
உழுந்தும் பயறும் கரலிய ஆயிடை
கொழுந்தண் கதிர்நிமிர் சுணைவிரி சோளம்
பீலிப் பசுங்கண் விரிக்கும் ஒருபால்
வெண்டை, வழுதலை, வியன்கொத் தவரை
தண்டிளங் கீரை தாள்மலி உள்ளி
குடைமடித் தன்ன தூங்குவண் மிளகாய்
யானைமுறஞ் செவி இகலிலைச் சேம்பு
பானைப் பருஉக்காய்ப் பசுங்கொடிப் பூசுணை
புடலையும் அவரையும் பொலிந்த பந்தர்
குடலையின் திரண்ட குறைவறு பெருஞ்சுரை
வயின் வயின் விளங்கும் வண்மைய தூரே!

(வளரும்)

மக்களவை

(யார்? யாருக்குக்) கையாள்!

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம் தென்மொழியின் செம்மாந்த நடையினையும், சீரிய கருத்துகளையும் கூன்கொள்ளாக் கொள்கைகளையும் பொருத சிலர் தென்மொழியின் பால் காழ்ப்பும், பதைப்பும் கொண்டு குறைகூறத் தொடங்கிவிட்டனர். தன்னுரிமை நாட்டத்திலும், இனக்காப்பிலும், மொழிச்சிக்கலை முட்டறுக்கும் திட்டப் பாங்கிலும் தென்மொழி ஒரு சிறிதும் தளர்ந்த போக்குடையதன்று. மாறாக, தாம்கூறும் மொழிக் காப்புக் கொள்கையில் இவர்தம் தெளிவும், உறுதியும், செயலாண்மை யும் எத்தகைய வென்பதற்கு இவர்களின் தாளிகைகளே சான்று பகர் வன. செத்துத் தொலைந்த வடமொழிக்குப் புத்துயிர் கொடுக்கப்புறப் பட்டிருக்கும் பார்ப்பனக் கும்பலிடத்தும் அவர்தம் அடிதாங்கிகளிடத் தும் தொடர்புகொண்டு, தம் பதவிப்பித்தையும் பொருள் நசையையுமே 'வெள்ளெனக்'காட்டிக்கொண்டிருக்கும் இவ் விலாங்கு நடைக்காரர்கள் தம் பிழையுணர்ந்து உளம் வருந்தும் நாள் வரத்தான் போகிறது.

தென்மொழியின் கடக ஆசிரியவுரையினைக் குறைகூறப்புகுந்த குறள்நெறித்தாளாசிரியர் தமிழ்க்காப்பில் எத்துணை நாட்டம் செலுத்து பவர் என்பது அவருடைய தாளிகை ஒவ்வொன்றையும் புரட்டிப்பார்ப் பாருக்குப் புலப்படும். வடசொற்களை அறிந்தோ அறியாமலோ கவ னக் குறைவாகவோ எழுதிவரும் அவ்விதழாசிரியர் வாயினின்று மலர்ந்த உயரிய கருத்தைப் பாருங்கள். ''எதை இழப்பினும் மீண்டும் பெறலாம். மொழியை இழப்பின் மீண்டும் பெற இயலாது'' தாம்கூறிய வற்றைச் செயல்படுத்தும் நாட்டம் இவர்க்கு இருக்குமாயின் 'பெர்னுட் ஷா...' போன்ற வடவெழுத்துச் சொற்களையும் 'சொர்க்கம், விபரீதம், நீதி, நிதி, தபால்' போன்ற வடசொற்களையும் களைந்து இனியாகிலும் எழுதுவாரா?

பேராயக்கட்சியே ஆளவேண்டும் என்பது எங்கள் கொள்கை யன்று. ஆட்சித்திறனும், அரசியல் ஒழுங்கும் கொண்ட, தமிழ் மொழிக்கு முதன்மையிடம் கொடுக்கும் ஆட்சியே மலரவேண்டுமென் பது தென்மொழியின் சீரியகொள்கை. இதனை உணராத போலியர் சிலர் பேராயக்கட்சியின் 'கையாள்' என்று கூறுவது எவ்வகையிலும் பொருந்துவதன்று.

துலாம்: கூ
விராலிமலை

அன்புள்ள,
உணர்வுப்பித்தன்.

கலப்பு மொழி நூல்கள்

அன்புடையீர்!

தமிழ்ச் சிறுவன் ஒருவன் முதன்முதலில் பள்ளி செல்லுங்கால் பெற்ருேர் வாங்கிக் கொடுக்கும் முதற் பொத்தகம் 'பெரிய அரிச்சுவடி' என்பதாகும். அச்சுவடியின் முழுப்பெயர் "ஸ்ரீமகள் பெரிய அரிச் சுவடி". கற்கும் சிறுவனுக்கு ஸ்ரீ' என்ருல் தமிழ்தான் என்று படிக்கும் நிலை ஏற்பட்டு விடுகின்றது. முதலில் "அரிச்சுவடி" என்ருல் என்ன பொருள்? வடமொழி கூறும் 'ஹரி' என்ற கடவுளின் (திருமாலின்) பெயரையும், சுவடி என்ற தமிழ்ச் சொல்லையும் இணைத்து "ஹரிச் சுவடி"யாக்கி – 'அரிச்சுவடி' என்று வழக்கிற் புகுத்திவிட்டனர்.

பொருள் அடக்கம் கூறும் இடத்தில் "பாலபோதம்", "கதா மஞ்சரி" போன்ற வடசொற்கள் உள்ளன. பொத்தகத்தின் இரண்டாம் பக்கத்தில் காண்பது என்ன? "இங்கிலீஷ் எழுத்துக்கள் –26" என்ற தலைப்பின் கீழ் ஆங்கில எழுத்து வரிசையும், அதன்கீழ் "இங்கிலீஷ் எண்கள்" என்ற தலைப்பில் 1, 2, 3 வரிசையும் காணலாம். (1,2,3 4 என்ற எண் வரிசை ஆங்கிலந்தானு என்பது வேறு). இதற்கெல் லாம் கீழே - கடைசியில்- சிறிய எழுத்துகளில் "தமிழ் எண்கள்" தரப்பட்டிருக்கின்றன.

மூன்ரும் பக்கம் வருவோமாஞல் எல்லாரும் கண்ணைமூடிக் கொண்டு படிக்கும் ஒரு வாய்ப்பாட்டைக் காணலாம். "ஹரிநமோத்து சிந்தம்" -என்ன பொருள்? தமிழ்தானு? சிறுவனுக்கு இதுவரை தமிழ் கூறப்படவில்லை. கேட்டதெல்லாம் வடமொழி. இத்தனைக்கும் பின் தான் அ. ஆ. இ. தொடங்குகின்றது.

"பாலன், பீடம், ஈசுரன், பரமன், சீமான், அரன், கீதம், தீரம்"-முதலிய வடசொற்களும் பிறவும் "மொழித்தொடர்" வரிசையிலும்,

"ஆக்ஞை, ஆபரணம், உற்சவம், கமலம், கீதம், கீர்த்தி, கேது, கௌரி, சாட்சி, சாந்தம், சாதம், சீமான், சீமாட்டி, செபம், சொர்க்கம், சொர்ணம், சோபம், தாகம், போகம், தீபம், தீரம், நாதன்" போன்ற வடமொழிகள் "அசைச் சொற்கள்" வரிசையிலும் காணலாம்.

மற்றும் மேற்கண்டவை தவிர, மொழி முதல் வாரா எழுத்துகளைக் கொண்ட சொற்களும் காணலாம். "டப்பி, டப்பா-"ரசம், ரணம்",

"ராத்தல், ராகம், ருசி, ரூபம், ரெட்டி, ரேகை, ரொக்கம். ரொட்டி. ரோகம், ரோமம்" என்பனவும்,

"லட்டு, லஞ்சம், லாடம், லாபம், லிங்கம், லீலை; லோபி" என்பனவும் காணலாம்.

மற்றும் சில ஆங்கிலச் சொற்கள் தமிழில் தமிழ்போல் மயங்கி வழங்கி வருவதும் உண்டு. அந்த வகைக் கலப்புக்கும் இந்தப் பொத்தகம் முதலிடம் அளிக்கின்றது.

"டாப்பு (Top), டாக்டர் (Doctor), பேனு (Pen)" - முதலியன.

இன்னும் பிற பக்கங்களில்,

"இராஜநீதி, கருடப்பட்சி, சாந்தகுணம், இரயில் வண்டி, பிரம தேவன்," எனவும்,

"சுவாமி கிருபைஉண்டு', அந்தபுஷ்பம் நல்லது, வாசமுள்ளமலர் ஒரு வெள்ளைச் சாவல், அட்டதிக்குப் பாலகர், ஜவுளி வாங்கிவா, தாவணி ஒன்று வாங்கு, ஒரு நந்தவனம், புஷ்பச் செடி உண்டு, தரிசனை பண்ணி வா, சகல பிணியும் நீங்கும்' என்பன போன்ற பிழையான மொழிகளும்,

'ஜீவ வதை', 'பாச்சி', 'விஷம்' முதலிய வேறு மொழிகளும் கலந்து காணப்படுகின்றன.

''அப்பா சாமி உன் பற்களை சாம்பலைக் கொண்டு உன்னால் தேய்க்கப்பட வேண்டாம்'' என்றொரு வாக்கியம் அதில் உள்ளது! இதுவா தமிழ்? இன்னும் ''நிகளக் கொம்புள்ள மாடு'', ''ஒருவித்வான் வாசஞ் செய்திருந்தான்'', ''தன் ஆஸ்தி யெல்லாம்'' 'சாஸ்திரங்களைக் கற்பித்தான்'', என்பனபோன்ற பிழையான சொற்களே மிகுந்துள்ளன.

இதைக் கற்கும் தமிழ் மகன் மனத்தில் தமிழ்த் தாயின் மேல் அன்பு ஊற்றெடுக்க இடம் ஏது? தந்தையர்கள் இதுபோன்ற இழிவான சுவடிகளை வாங்கிக் கொடுத்துத் தமிழ்ச் சுவையைக் கெடுக்காமலும், அரசும் இதுபோன்ற பிழையான பொத்தகங்களைத் தடைசெய்தும் இருந்தால் இந்நிலை நீடிக்காது – இது திண்ணம்.

நாட்டில் தமிழ் காக்க, எத்தனையோ பேர்கள் தமது பெயர்களை மட்டும் முதலில் நிறுத்தினார்கள் - தமிழுக்காக எத்தனையோ பாராட்டு நிலையங்களும், மொழி ஆராய்ச்சி நிறுவனங்களும் இருந்தும், இந்நிலை கவனிக்கப்படவில்லை என்பது வருந்தத்தக்க ஒன்றாகும்; இல்லையா?

அரசினர் ஒப்புதலின்றி இதுபோன்ற பாடங்கள் பரவுவது (இன்னும் இதுபோல் பொத்தகங்கள் மலிந்துள்ளன தமிழ் நாட்டில்) தமிழைக் கூட இருந்தே கெடுக்கும் சூழ்ச்சி என்று கருதாமல் வேறு என்னவென்பது?

வாழ்க தமிழ்! வீழ்க கலப்பு மொழி!

அ. ஒப்பிலாமணி, கீரமங்கலம் அஞ்சல், தஞ்சை மாவட்டம்.

தென்மொழி, கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள் நாடு	கொழும்பு	வெளி நாடு
ஆண்டுக் கட்டணம்	6 உருபா	7-25 உருபா	9 உருபா
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்

அட்டை நான்காம் பக்கம்	(இரு வண்ணம்)	100 உருபா
,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா
உள்ளே முழுப்பக்கம்		50 உருபா
,, அரைப்பக்கம்		25 உருபா

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

துறவி தந்த மணநூல்!

(மு. வை அரவிந்தன், எம். ஓ. எல்., தமிழ்த்துறை.
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

திருத்தக்க தேவர் சமண சமயத்தவர்; கடுந்துறவு பூண்டு வாழ்ந்த சான்றோர். அவர் இயற்றிய பெரும் பாவியமாகிய சீவக சிந்தமணி 'மண நூல்' – என்று போற்றப்படுகிறது. துறவி தந்த மண நூலைப் பற்றிக் காலந்தொறும் பல வினாக்கள் எழுந்துள்ளன. நடுநிலைமையில் இருந்து, அவ் வினாக்களை ஆராய்வது ஆராய்ச்சி யாளரின் கடனாகும்.

குற்றமா?

சீவகசிந்தாமணியில் காமச் சுவையைத் திருத்தக்க தேவர் மிக விரிவாகப் பாடியுள்ளதைக் கண்டு, அவர் காலத்தில் வாழ்ந்த புலவர் இளமை முதல் துறவு பூண்டு வாழ்ந்த தேவரின் ஒழுக்கத்தை ஐயுற் றனர் என்று ஒரு கதை வழங்குகின்றது. குமர குருபரர் மீதும் இத் தகைய குற்றச்சாட்டு பிறரால் ஏற்படுத்தப்பட்டதாகக் கூறுவர். இன்றும் இத்தகைய குற்றத்தை அவர்கள் மீது சுமத்துவோர் உளர். துறவிகளுக்கு இவ்வுலக வாழ்வைப் பற்றி ஒன்றும் தெரியாது, தெரிந் திருக்கக் கூடாது – என்ற எண்ணமே இவ்வாறு குற்றங் கூறு வதற்குக் காரணமாகும்.

சீவகசிந்தாமணியைக் கற்கும்போது தேவர், வாழ்க்கையின் பல் வேறு நிலைகளை அறிந்தவர் என்பது விளங்கும். அவர் கண்கள் உலகத்தை நன்கு உற்று நோக்கியுள்ளன. அவர் உள்ளம் நன்மை தீமைகளைத் தெளிவாக உணர்ந்திருக்கின்றது. அவர் அறிவு பல் வேறு மக்களின் மனநிலை, வாழ்க்கை வகை, செயல் - ஆகியவற்றை அறிந்திருக்கின்றது. கலைஞர் தம் கற்பனைத் திறத்தாலும் அறிவின் ஆற்றலாலும் பிறருடைய வாழ்க்கைப்பட்டறிவுகளைப் பெற வல்ல வர்கள். மேலும் இவ்வுலகில் வாழ்ந்து வாழ்ந்து பழகிப் பட்டறிவு பெற்ற அறிஞர்கள் இயற்றிய நூல்களின் வாயிலாக உலக அறிவைப் பெற்றுக் கொள்கின்றனர். வாழாமலே வாழ்ந்த பட்டறிவைப் பெறுகின்றனர். காணாமலே காட்சியின் பயனைப் பெறுகின்றனர். இத்தகைய ஆற்றல் பெறுவது குற்றமா?

தேவர் பல நூல்களைக் கற்றவர்; பல்கலைகளைப் பற்றி அறிந்தவர்; பல மக்களின் வாழ்க்கையை ஆராய்ந்தவர். அவர் கற்ற கல்வி அவரது நூலின் வாயிலாக வெளிப்படுகின்றது அதற்காக அவரைக் குற்றம் கூறுவதா?

தமிழ் - அகப்பொருள் நூற் கருத்தும், வட மொழியில் உள்ள காம நூலின் பொருளும் அவர் நூலில் இடம் பெறுகின்றன; திருக்குறளின் கருத்தும் வடமொழி நெறி நூல்களின் உட்பொருளும் இடம் பெறுகின்றன. அரசியல் நூல்களின் நுட்பமும், புறத்திணைக் காட்சிகளும் பொலிகின்றன; பாரதக் கதைகளும் 'பஞ்ச தந்திர'க் கதைகளும் (1927, 1928); சைன சமயக் கருத்தும், கணியம், மருத்துவம், தருக்கம் முதலிய கலைகளும் அங்கங்கே தோன்றுகின்றன. இவற்றிற்கெல்லாம் மேலாக தேவரின் தூய துறவுள்ளம் நூல் முழுதும் வெளிப்படுகின்றது!

காமத்தின் சுவைகண்டார் காமநூல்
என்கின்றார்; கரும நீதித்
தாமத்தின் நிலைகண்டார் தருமநூல்
என்கின்றார்; தவங்கள் சார்ந்த
நாமத்தின் நலம்கண்டார் ஞானநூல்
என்கின்றார்; நயந்தோர்க் கெல்லாம்
சேமத்தை அருளுகின்ற சீவகசிந்
தாமணியைச் செய்து தந்தாய்!

– (செகவீரபாண்டியனார்.)

என்று தேவர் திருவுள்ளத்தைப் போற்றி, அவரை வாழ்த்துதல் நம் கடனாகும்.

சிந்தாமணி சிற்றின்ப நூலா?

சிந்தாமணி, சிற்றின்பம் பாடும் நூல் என்று கூறிப் புறக்கணித்துச் சேக்கிழார் பெரியபுராணம் இயற்றி, அனபாய சோழனுக்குத் தந்தார் என்று ஒரு கதையுண்டு. இக் கதைக்கு அகச் சான்றில்லை என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். இன்றும் அப் பாவியத்தைச் சிற்றின்பம் பாடும் நூலென்று புறக்கணிப்பவர் உளர். அவர்கள் கருத்திற்கேற்பச் சிந்தாமணி 'மணநூல்' என்று புகழப்படு

கிறது. பாவியத் தலைவனாகிய சீவகன் மகளிர் எண்மரை மணக்கின்றான். ஒவ்வொரு மணத்தின் இறுதியிலும் இன்பச் சுவை மிகுதியாகப் பாடப்பட்டுள்ளது. இவற்றிற்கும் மேலாகச் சச்சந்தனும் விசையையும் வாழ்த்த காதல் வாழ்க்கையில் இன்பச் சுவை விளக்கமாகப் பாடப்பட்டுள்ளது. இவற்றை எல்லாம் எடுத்துக்காட்டிச் சிந்தாமணி சிற்றின்பத்தைப் பாடும் நூல் என்று கூறிவிடுகின்றனர்.

கடுந்துறவு பூண்ட சமணத் துறவி திருத்தக்க தேவர். அவர் பாவியம் பாடுகின்றார். உலக மக்களுக்கு நன்னெறி காட்ட நூல் செய்கின்றார். அவர் சிற்றின்பத்தை மிகுதியாகப் பாடுவதேன்? மனம் மொழி மெய்களால் அறம் வளர்க்கும் சமணத் துறவியாகிய தேவர் சிற்றின்பம் பாடுவதையா தம் நூலின் நோக்கமாகக் கொள்வார்? இத்தகைய வினாக்கள் நம் உள்ளத்தில் எழுகின்றன.

பாடுவது ஏன்?

பட்டினத்தார், அருணகிரிநாதர், தாயுமானவர் - போன்ற துறவிகள் பெண்ணின்பத்தை விரிவாகப் பாடி, முடிவில் அதன் இழிவையும் அது தரும் துன்பத்தையும் சுட்டி, அறநெறியைக் காட்டுகின்றனர். இவ்வாறு அவர்கள் பாடுவது ஏன்? சீறிவரும் சினப் புலியை ஆடவிட்டு, அலைக்கழித்துக் களைத்து விழும் நிலையில் கொல்வதுபோல – கட்டுக்கடங்காமல் ஓடும் குதிரையை அதன் போக்கிலே விட்டுக் களைத்த நிலையில் தடை ஏற்படுத்தி நிறுத்துவது போலச் சிற்றின்பத்தை எடுத்துக் கூறி, அதன் முடிவைக் காட்டி நம் மன நிலையை மாற்றுகின்றனர். இவ்வாறே தேவர் தம் நூலில் செய்துள்ளார்.

இன்பத்தின் எல்லை:

இன்பம் இன்பம் இன்பம்
இன்பத் திற்கோர் எல்லை காணில்
துன்பம் துன்பம் துன்பம்

(குயில் பாட்டு)

என்று பாரதியார் பாடுகின்றார். இந்தக் கூற்றுச் சச்சந்தன் வாழ்க்கையில் உண்மையாகின்றது. விசையையின் அழகில் ஈடுபட்டு, அரசியலை அமைச்சனிடம் ஒப்படைத்து, உவளகத்தில் சிற்றின்பத்தில் மூழ்கிக் கிடந்த சச்சந்தன் வாழ்க்கை துன்பத்தில் முடிகின்றது.

சச்சந்தன் சிற்றின்ப நுகர்ச்சி மிகுதியால் அழியப் போகின்றான் என்பதைத் தேவர் பல இடங்களில் குறிப்பாகச் சுட்டுகின்றார். விசயையை மணக்குமுன், சச்சந்தனுக்கு அவள்மீது எழுந்த காதலை,

தையலாள் நெடுந்தடங் கண்
வலைப்பட்டுச் சச்சந்தன்
ஐயுறான் அணங்கு எனவே,
அகத்தடக்கிச் செல்கின்றான். (181)

என்று குறிப்பிடுகின்றார். அவள் கண்வலைப்பட்டு அணங்கு என்று கருதிச் செல்லும் மன்னன் நலம் பெறப் போவதில்லை? கண் வலைப் படுத்தும் அணங்கு நன்மை செய்யுமா? - இவ்வாறு தேவர் சொல்லா மல் சொல்லுகின்றார்!

இருவர்க்கும் திருமணமாகி இன்பமாக வாழும்போது. 'காம வல்லியும் ஒப்பரும் பாவை போன்று உறையும் (197)' என்று தேவர் கூறுகின்றார். கணவனுக்கு விசயை 'கொல்லிப் பாவை' யாகவே இருக்கிறாள்!

சச்சந்தன் அரசைத் துறந்து விசயையுடன் இன்பத்தில் மூழ்கிய நிலை,

விளக்கம் இருள்கொள விளங்கு வெண்மதி
ஒண்ணிற உரோணியோடு ஒலித்தது ஒத்ததே (198)

என்று தேவர் கூறுகின்றார். இவ்வுவமை தேவரின் உள்ளக் கருத் தைத் தெளிவுபடுத்துகின்றது.

சச்சந்தன் தன் தேவியை 'அமிர்தமா' எண்ணிப் 'பருகி யிட்டான்' (190)

ஆனால் அவளோ அவனைக் கொல்லும் நஞ்சாகின்றாள்.

இவ்வாறு பல இடங்களில் குறிப்பாகத் தம் கருத்தை வெளி யிடும் தேவர், சச்சந்தனின் அமைச்சர் வாயிலாகவும் அரிய நெறிகளைக் கூறிச் சச்சந்தன் வாழ்க்கையைச் சிறந்த பாடமாக உலகிற்கு அமைத்துக் காட்டுகின்றார்.

சீவகன் சிற்றின்பத்திற்கு எளியவனா?

மகளிர் எண்மரை மணந்த சீவகன் சிற்றின்பத்திற்கு எளியன் அல்லன். அக்கால மன்னர் வாழ்க்கை மகளிர் பலரை மணந்து வாழ்வதாய் அமைந்து கிடந்தது. பெண் கருதிப் போரிட்டுச் சிறைப் பிடித்த மகளிரை வற்புறுத்திச் சீவகன் மணந்து கொள்ளவில்லை. ஆவலால் தகுதியிழந்து தாழ்ந்து நின்று எந்தப் பெண்ணையும் மணக்கவில்லை. மகளிர், அவனைக் கண்டு தாமே விரும்பி மணக்க உறுதிபூண்டு நிற்பதாலும், பெண்ணைப் பெற்றோர் வேண்டுவதாலும் சிலரை மணக்கிறான். தான் கற்ற பலவேறு கலைகளில் தனக்கிருக்கும் திறன் காட்டிச் சிலரை மணக்கிறான்; தன் ஆண்மைத் தோற்றத்தைக் காட்டி ஒருத்தியை மணக்கிறான். ஊழ் ஒருத்தியைக் கூட்டி வைக்கிறது.

சீவகன் சிற்றின்பத்திற்கு எளியனாய் இருந்திருப்பின் முதலில் கோவிந்தையை மணந்திருப்பான். அநங்கமாலை என்னும் ஆடல் மகள் தன்னை விரும்பியபோது மறுத்துச் செல்கிறான் சீவகன். காட்டில், பவதத்தன் மனைவியாகிய அநங்கமாவீணை தன் தீய விருப்பத்தைச் சீவகனிடம் கூறி இரந்து நின்றபோது, ‘பிறன்மனை நோக்காத பேராண்மை’யுடன் அவ்விடம் விட்டு அகல்கின்றான். அவள் கணவனைப் பார்த்தபொழுது அவளுடைய தீய நினைப்பைக் கூறி, அவர்கள் உறவைக் கலைக்காமல் பொதுவான அறவுரை கூறிச் செல்கின்றான். இப் பண்புகள் சீவகனை உயர்த்திக் காட்டுகின்றன; அவன் சிற்றின்பத்திற்கு எளியன் அல்லன் என்பதை உணர்த்துகின்றன.

மண நூலா? துறவு நூலா?

ஒருவர் வாழ்க்கையின் வெற்றி தோல்விகளை முடிவில்தான் காண வேண்டும். ஒரு நாடகத்தின் முடிவைக் கொண்டே அது துன்பியலா, இன்பியலா என்று கூற வேண்டும். ஓட்டப் பந்தயத்தின் தொடக்கத்தில் ஏற்படும் உயர்வு தாழ்வுகளைக் கண்டே முடிவுகூற முடியாது; இறுதியைக் கொண்டே வென்றவர் யார், தோற்றவர் யார் என்று முடிவு செய்ய வேண்டும்.

சீவக சிந்தாமணிக் காப்பியத்தின் முடிவைக் காணும்போது அதை மண நூல் என்று கூறுவதைவிடத் துறவு நூல் என்று கூறு

வது சரி எனத் தோன்றுகிறது. கதையின் இறுதியில் அரசி விசயை துறவு பூணுகின்றாள்; காப்பியத் தலைவன் துறவு மேற்கொள்ளுகின்றான்; அவன் மனைவியரும் துறக்கின்றனர். இவர்களின் துறவு திருத்தக்க தேவரால் சிறப்பிக்கப்படுகின்றது.

விசயையின் துறவு

அரசர் குடியில் பிறந்து, அரசனுக்கு வாழ்க்கைப்பட்டு அரச இன்பத்தை நுகர்ந்து வாழ்ந்தவள் விசயை. பின் அத்தகைய வாழ்வை இழந்து வருந்துகின்றாள். மீண்டும் அத்தகைய பெரு வாழ்வு அவள் மகனால் அவளுக்கு வாய்க்கின்றது. அரச வாழ்வும் செல்வச் செழிப்பும் அவளைத் தேடி வருகின்றன. ஆனால் அவற்றில் அவள் பற்றுக் கொள்ளாமல் துறவு பூணுகின்றாள். ஓவியம் எழுதிய எழில்வண்ணப் பட்டாடை உடுத்திச் செருக்கித் திரியும் கன்னியர் நடுவில், காவி உடைபூண்ட நரை மூதாட்டி தோன்றுவதுபோல, மண நூலின் நடுவே விசயையின் துறவு விளங்குகின்றது. இன்பச் சுவைக்குச் சரியான மாற்றாக விசயையின் அறவுரை அமைகின்றது.

சீவகன் துறவு

பல பெண்டிரை மணந்து, அரச வாழ்வு எய்திய சீவகன் துறவு நம் உள்ளத்தில் நீங்காத இடத்தைப் பெறுகின்றது. துறவு கொள்ளும் மன நிலை அவனுக்கு எங்ஙனம் வாய்த்தது என்று நாம் மருளுகின்றோம்.

சீவகன் அரசைத் துறக்கின்றான்; தன்னிடம் இருந்த அத்தனைச் செல்வங்களையும் துறக்கின்றான்; பல நாள் முயன்று கற்ற கல்வி கலைகளைத் துறக்கின்றான்; அவனையன்றிப் பிறரை மணவோம் என்று வாழ்ந்த காதல் மனைவியரைத் துறக்கின்றான். இத்தகைய துறவு அவனது உள்ளத் திண்மையைக் காட்டுகின்றது.

அரசு அவனுக்கு எளிதில் கிடைத்துவிடவில்லை. அது வழி வழிச் சொத்தாக அவன் கைக்கு வரவில்லை. பிறர் அவனிடம் ஒப் படைக்கவில்லை. இரக்கமற்ற வலிய பகைவன் கீழேயே மறைந்து வளர்ந்து, மெல்ல மெல்ல வலிமை பெற்று, ஓராண்டுவரை அப் பகைவன் கண்ணில் படாமல் மறைந்து வாழ்ந்து, அந்த ஓராண்டில் தன் வலிமையைப் பெருக்கிக் கொண்டு, இடமும் காலமும் துணையும்

நன்கு வாய்த்தபோது வெளிப்பட்டுப் பகைவனோடு களத்தில் போராடி அவனைக் கொன்று வீழ்த்தி அரசைப் பெறுகிறான் சீவகன். இவ்வாறு முயன்று அரிதில் பெற்ற அரசைத் துறக்கின்றான்.

சீவகன் மணந்த மகளிர் அவனுக்கு எளிதில் வந்து வாய்த்துவிடவில்லை. பல கலைத்திறன்களை எல்லாம் காட்டிப் பிறரால் மணத்தற்கரிய பெண்டிரையே மணக்கின்றான். மேலும் அப்பெண்டிரும் அவனிடம் தீராக் காதல் கொண்டு அவனை மணந்து இன்பமாக வாழ்கின்றனர்; இத்தகையவரைப் புண்மேற் சீலை என நீக்கி அகல்கின்றான்.

சீவகனின் இரு வேறு நிலைகளையும் அரிமா நோக்காகக் காணும்போது, நமக்கு வியப்புண்டாகின்றது. பாவியம் இயற்றிய தேவரின் நோக்கம் புலனாகின்றது.

உலகத்தை நன்னெறியில் செலுத்தவே சான்றோர்கள் பாவியம் படைக்கின்றனர்; இன்பமும் துன்பமும் மயங்கிக் கிடக்கும் உலகில் வாழும் மக்களுக்கு அழியா இன்பம் எஃது என்று உணர்த்தவே நூல் இயற்றுகின்றனர். அவர்களுடைய நோக்கத்தை உணர்ந்து போற்றுவது ஆராய்ச்சியாளரின் கடனாகும். சமயக் காழ்ப்பு இல்லாமல் சீவக சிந்தாமணியை உற்று நோக்குவோர்க்குத் திருத்தக்க தேவரின் உள்ளம் புலனாகும்; துறவி தந்த மணநூல் பல உண்மைகளை உணர்த்தும். O

மலேசியா அன்பர்களுக்கு...

தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆகிய இரண்டு இதழ்கட்கும் நமது அலுவலக முறைப்படி முகவராகப் பதிவு செய்யப்பெற்று உரிமை பெற்றுள்ளவர் திரு. அழ. அழகிரிசாமி அவர்களேயாவர். விற்பனையாளர் சிலர் திருட்டுத்தனமாக இதழ்களைப் பெற்று மலையநாட்டில் விற்பனை செய்து வருகின்றனர். இதுபற்றிச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பெற்று வருகின்றது. ஆகலின் மலேசியா அன்பர்களும் விற்பனையாளர்களும் கீழ்க்காணும் முகவரியுடைய நமது முகவரிடமே தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

— அமைச்சர்.

Thiru. AZHA. AZHAGIRI SAMI,
82. Bellfield Road,
IPOH. MALAYSIA.

முதல் புரட்சி

க. ப. அருணாசலம், கீ. க. தே (பி. ஓ. எல்)
தமிழ் ஆராய்ச்சித் துறை,
திருவனந்தபுரம்.

தமிழக வரலாறு இன்றுவரை செப்பமுற எழுதப்படவில்லை. எழுதப்பட்ட வரலாறுகளுள் பெரும்பாலனவும், நடுநிலைமை தவறி யோர் கைகளில்பட்டு நிகழ்ச்சிகள் திரிக்கப்பட்டும், திருத்தப்பட்டும், மறைக்கப்பட்டும் எழுதப்பட்டுள்ளன. வரலாற்றுக்கு முதற்சான்றாகிய கல்வெட்டுகள் பல இன்னும் வெளியிடப்படாமல் இருக்கின்றன; பழந்தமிழ்ப் பெருநகரங்கள் அனைத்தும் அகழ்ந்து ஆராயப் படாமல் இருக்கின்றன; வரலாற்று ஆசிரியர்களிடத்தும், தமிழகத்தின் மூலை முடுக்குதோறும் நேரில் சென்று ஆராயும் பாங்கு குறைவாகவுள்ளது; சிறந்த வரலாற்று ஆசிரியர்கள் சிலர் இருப்பினும் அவர்கள் நெஞ்சத் துக் கரவு குடிகொண்டிருக்கிறது. இத்தகு காரணங்களாற்றான் தமிழக வரலாறு புதையுண்ட மணியாக ஒளி குறைந்து கிடக்கிறது. இந்த நிலைமாறித் தமிழக வரலாறு எழுதப்படுமானால் தமிழ்மண்ணின் வர லாற்றுச் சிறப்பு வெளிப்படும். உலக வரலாற்று அறிஞர்களின் கண் களைக் கவர்ந்து ஈர்க்கும் வாய்ப்பும் ஏற்படும்.

தமிழக வரலாற்றில் பொற்காலமாகக் கருதப் பெறும் கழகக் காலத்தை அடுத்து அரசியலில் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அந்த மாற்றம் 300 ஆண்டுகள் நிலைபெற்று மறைந்து ஒழிந்தது. அந்தப் பெரிய இடைவெளியில் தமிழகம் தனக்கே உரிய மொழி, கலை நாகரிகம் இவற்றுள் வீழ்ச்சி அடைந்து விட்டது. மதுரையில் நிலவிய கடைக் கழகமும் அழிந்தது. இத்துணை அழிவுக்கும் காரணம் ஏதிலராகிய களப்பிரர் படைஎடுப்பே—என்பது வரலாற்றாசிரியர்களது கருத்தாகப் பதிந்து கிடக்கிறது.[1] இந்தக் கருத்து சரியானதுதானா என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

---

1. கலைக்களஞ்சியம். தொகுதி. iii பக். 375.
பாண்டியர் வரலாறு, தி. வை. ச பண்டாரத்தார். பக். 32.
தமிழ் இலக்கிய வரலாறு. I ., பக். 14.
தமிழக வரலாறு, அ. மு. பரமசிவானந்தம். பக். 175.
Sources of South Indian History-Prof. K.A N, Sastri, P. 58.

i கழகக்காலத் தமிழ் வேந்தர் நிலை: தமிழர் கி. மு. 2000 ஆண்டுகட்கு முன்னேயே முதிர்ந்த நாகரிகத்தினராய் விளங்கினார்கள் என்பது ஆதிச்ச நல்லூர் முதலான இடங்களில் கிடைத்த சான்றுகளால் விளக்கமாகிறது. அவர்கள் கி. மு. 3000 ஆண்டுகள் அளவிலேயே இந்தியா எங்கும் பரவி, சிறந்த நாகரித்தோடு இலங்கினார் என்பது சிந்துவெளி அகழ்வாராய்ச்சியால் தெளிவாகிறது.[1] கலை, மொழி, பண்பாட்டில் தனித்தன்மை பெற்று விளங்கிய தமிழர் இனம்– கி.பி. 3ஆம் நூற்றாண்டில் ஒரு பெரும் மாறுதலுக்கு உட்படுகின்றது. மூன்றும் கழகத்தின் முடிவுக்காலம் கி. பி. மூன்றும் நூற்றாண்டு என்பது வரலாற்றாசிரியர் ஒத்துக்கொண்ட உண்மையாகும்.

கி. பி. மூன்றும் நூற்றாண்டில் ஏற்பட்ட சரிவு அல்லது மாற்றம் 'திடும்' என நிகழ்ந்திருக்க முடியாது. அந்த மாற்றத்திற்கான, காரணங்கள் அதற்கு முன்னேயே கருக் கொண்டிருத்தல் வேண்டும். இந்த மாற்றத்திற்கும் தமிழகத்தில் ஆரியர் நுழைவிற்கும் பெருந் தொடர்பு இருந்திருத்தல் வேண்டும். கி. மு. 1500-இல் ஆரியர் இந்தியாவில் நுழைந்தனர்.[2] கி. மு. 4-ஆம் நூற்றாண்டளவில் ஆரியர், தமிழரோடு தொடர்பு கொள்ளத் தொடங்கினர்[3] நம் வரலாற்று அறிவுக்கு எட்டியவரை தமிழினத்தோடு நெருக்கமான உறவுகொண்ட முதல் இனம் ஆரிய இனமே என்பது தெளிவு. இதனைக் கழகக்கால இலக்கியங்களும், தொல்காப்பியமும் உறுதி செய்கின்றன.[4]

வடநாட்டினின்று தென்னாடு போந்த ஆரியர் தங்கள் சமயக் கொள்கைகளையும், தங்கள் பழக்க வழக்கங்களையும், வடமொழியையும் தமிழரிடம் பரப்பப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டனர். மக்களுள் அனைவரையும் தம் வழிப்படுத்த, முதலில் மன்னர்களைத் தம் வழிப்படுத்தினர். தமிழ் வேந்தரின் விருந்தோம்பல் பண்பினைப் பயன்படுத்திக் கொண்டு தம் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புகுத்தினர். இந்த முறையில் அவர்கள் பெருவெற்றி பெற்றனர் என்றே சொல்ல வேண்டும். 'ஆரியர் தமிழ் கற்றுத் தமிழாசிரியராயும், பின்பு சமயவாசிரியராயும் அமர்ந்தபின், தமிழ் அரசரே பலமுறைப் பார்ப்பனரைக்

1. தமிழ்நாட்டு வரலாறு..பர். மு ஆரோக்கியசாமி. பக். 8, 9.
2. The Indian Synthesis and Racial and Cultural Inter Mixure in India. by S. K. Chattarji. P. 275.
3. Aryan Influence in Tamilaham during the Sangam Epoch. Tamil Culture vol. XII. April: Sept: 1966-Dr. K.K.Pillai. P. 159 - 169.
4. முல்லைப்பாட்டு 31–37; மலைபடு-326; குறுந், 7; தொல். நூற்பா. சொல் 401. பதிற்றுப்பத்து, பட்டினப்பாலை முதலாயின.

கூட்டங் கூட்டமாய் வடநாட்டினின்றும் வருவித்துத் தமிழ் நாட்டில் குடியேற்றி இருக்கின்றனர் என்று அறிஞர், பாவாணர் கருதுவது ஈண்டுக் கருதற்குரியது.[1]

'அச்சுதனர், உருத்திரனர், கௌதமனர், பதுமனர், மார்க்கண்டேயனர், தாமோதரனர், வான்மீகியார், கார்க்கியார், கோவர்த்தனர், சத்தி நாதனர், பிரமனர், கௌசிகனர், சாதேவனர், பிரமசாரி'- ஆகிய வடமொழிப் பெயர்கொண்ட புலவர்கள் கழகக் காலத்திலேயே வாழ்ந்துள்ளனர்.[2] மதுரையிலிருந்த பார்ப்பனப்பள்ளி, மலைப்புழை போலக் கட்டிப்பட்டிருந்தது; அங்கிருந்த பார்ப்பனர்கள் மக்கட்குச் சமயக் கருத்துகளை வழங்கினர்; நான்மறை, ஆறுறுப்பு இவற்றில் வல்ல அந்தணர் தமிழ் அரசரிடம் மதிப்புப் பெற்றனர்; ஊர்களையும் நிலங்களையும் வைப்பூட்டாக (மானியமாக)ப் பெற்றனர்; அரசர்கள் அவர்கட்குப் பொன்னும் பூவும் வழங்கினர். நாட்டின் மீது பகைவர் படை எடுத்துவரும் போது பார்ப்பனமாக்கள் தாக்கப்பட்டனர்.[3] வந்தேறு குடிகளான பிராமணர் இவ்வாறு வாழ்வு பெற்றனர் என்பதைக் கழக இலக்கியங்கள் காட்டுகின்றன. இவற்றைக் காட்டிலும்......பார்ப்பனர்கள் அடைந்த பெருவெற்றி என்று கூறத்தகுவன பாண்டியன் ஒருவனைப் பலவேள்விகள் இயற்றும்படி செய்து அவனைப் பல்யாக சாலை முது குடுமிப் பெருவழுதி என்ற பெயரால் சிறப்பித்ததும்,[4] சோழன் ஒருவனை இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்ற பெயரால் சிறப்பித்ததும்[5], பல்யானை செல்கெழு குட்டுவன் என்ற சேரனிடமிருந்து பாலைக்கௌதமன் என்றபார்ப்பான் தானும் தன் மனைவியும் துறக்கம் புகுவதற்காக, ஒன்பது பெருவேள்வி வேட்பிக்சப் பொருள் பெற்றுப் பின் அவனைத் துறவு பூணச் செய்து காட்டுக்குச் செல்லும்படி செய்ததும்[6] ஆகும்.

---

1. ஒப்பியன் மொழிநூல். பக். 28.
2. தெ. பொ, மீ, மணிவிழாமலர், பர். மொ. அ. துரைஅரங்கனர். கட்டுரை. பக் 333.
3. சைவ சமய வளர்ச்சி. பர். மா. அரசமாணிக்கனர். பக். 33
4. புறம். 15; ஒப்பியன் மொழிநூல். பக். 34.ல் பாவாணர் கருதுவதும் இதுவே.
5. புறம். 16.
6. பதிற்று. 3. பதிகம்.

ii வேள்வி (யாகம்) தமிழர் நெறி அன்று: வேள்வி என்பது 'பாகயாகம்,' 'அவியாகம்,' 'சோமயாகம்' என முப்பகுதியாய் ஒவ்வொரு பகுதியும் எவ்வேழாய், இருபத்தொரு வகைப்படும். இவையே அன்றி நாடோறும் செய்யப்படும் படைப்போன் வேள்வி,(பிரமயாகம்) தேவர்வேள்வி (தேவயாகம்), மாந்தவேள்வி (மானுடயாகம்), முன்னோர்வேள்வி (பிதிர்யாகம்), பூதவேள்வி (பூதயாகம்) என ஐம்பெரும் வேள்விகள் உள்ளன. வேட்டல் ஆரியர்க்குரிய தொழில்களில் தலையாய ஒன்று. ஆரிய மறைகளில் பெரும்பகுதியும் இந்த வேள்வி பற்றிய செய்திகளேயாம்.

இருக்கு, 'வேத'த்தைச் சேர்ந்த 'ஆசுவலாயன சூத்திரத்திலும்,' 'சாங்காயன சூத்திரத்தி'லும், 'வாசபேயம்,' 'ராசசூயம்' 'அசுவமேதம்,' 'புருடமேதம்,' 'சர்வமேதம்' என்று ஐவகை வேள்விகள் வேட்குமாறு சொல்லப்பட்டிருக்கின்றது. சாங்காயனர் இவ்வேள்வி வேட்குமுறைகளை மிக நுணுக்கமாக விரித்துரைக்கின்றார். கிருட்டிண யசுர் 'வேத' 'தைத்திரீய சம்கிதையின்' நாலாங்காண்டம் ஆறும் 'பிரபாடத்தில்' குதிரையைக் கொன்று வேட்கும் 'அசுவமேத' இயல் வகுத்துரைக்கப் பட்டிருக்கின்றது. தைத்திரிய பிரமாணத்திலோ (3, 4) சௌத்திராமணீ வேள்வியும், ஆண்மகனைக் கொன்று வேட்கும் வேள்வியும் கூறப்பட்டிருக்கின்றன. 'சதபத பிராமணம்' (7, 5, 2) ஆண்மகன், குதிரை, எருது, செம்மறி, வெள்ளாடு முதலான ஐவகை உயிர்களின் தலைகளை வெட்டிச் செங்கற் பலிமேடையின் அடியில் புதைக்கும் சட்டியில் இடுக வென்று கட்டளை இடுகின்றது. ஒருகால் 195 ஆண் மக்களை வெட்டிவேள்வி வேட்ட குறிப்பும்,அந்தச்'சதபத பிராமணத்தி' லேயே காணப்படுகின்றது. (13, 6, 2). குதிரையைக் கொன்று வேட்கும் வேள்வி 'இருக்கு வேத' முதல் மண்டலத்தின் 162ஆம் பதிகத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருத்தலால், ஆரியர் உயிர்க்கொலை புரிந்து அவற்றின் ஊனைத்தின்று வந்தமை மறுக்கப்படாத உண்மையாகும். இவ்வாரியரது சேர்க்கையால் தமிழ அரசர்களும் செல்வர்களும் இத்தகைய உயிர்க்கொலை வேள்விகளை மிகுதியாய்ச் செய்யத் தொடங்கினர்.[1]

தமிழர் தம் அறநெறி மறந்து புறநெறி போற்றுவதைத் தடுத்து நிறுத்தவே திருவள்ளுவர்,

1. மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் I மறைமலையடிகள். பக். 368. 369. சைவ சமய வளர்ச்சி. பர். மா. அரசமாணிக்கனார். பக். 34.

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத்து உண்ணுமை நன்று' (குறள்–259)

என்று அறிவுறுத்தினர்.

இந்த வேள்விமுறை தமிழர்க்கு உரியதும் அன்று; உடன்பாடும் அன்று என்பது தமிழ் இலக்கிய, நாட்டுவரலாற்ருல் உணரப்படும் உண்மையாகும் என்பது கீழ்வருவன வற்ருல் தெளிவாகும்.

1. ஆரிய அரசர் வேள்வி செய்வதை ஒரு நோக்கமாக் கொண்டாற்போலத் தமிழ் வேந்தர்கள் – அந்த அளவில் அதனைப் போற்றவில்லை. பேரரசர்களாக நாடாண்ட முதல் இராசராசனும், முதல் இராசேந்திரனும், முதல் குலோத்துங்கனும் வேள்விகள் செய்யவில்லை. [1]

2. தமிழரின் தனிப்பெரும் அறிஞரான திருவள்ளுவர்க்கு வேள்வி உடன்பாடு அன்று.

3. தமிழருள் மிகப் பெரும்பான்மையினரான வேளாளர்க்கு வேள்வி செய்ய உரிமையில்லை. மாருக மிகச் சிறுபான்மையினரான பார்ப்பனர்க்கு உரியதாகக் கூறப்பட்டுள்ளது.

4. வேள்வி எதிர்ப்புச் சமயங்களான சமணம், பௌத்தம் வடநாட்டில் வாழ்வு இழந்து தென்னுட்டில் வாழ்வு பெற்றதற்கும்[2], தென்னுட்டார் முன்பே வேள்வி சமய எதிர்ப்பாளராய் இருந்தமை காரணமாகலாம்.

5. சிந்துவெளி 'அரப்பா - மொகஞ்சோதரா' நாகரிகம் இன்று வரை பெரும்பாலோரால் திராவிட நாகரிகம் எனக் கொள்ளப்

---

1. The 'aswametha' occurs only once and that is the inscriptions of Rajathiraja. Prof. K.A.N. Sastri's Colas. P. 451

2. 'The Jaina heritage in the South is so rich and the material for its study so plenty.' Jainism in South India - Editor's Preface VI,

படுகிறது.[1] அந்நாகரிக அடையாளங்களுள் ஒன்றேனும் திராவிடர் [தமிழர்] வேள்வி செய்தனர் என்று சுட்டிக் காட்டவில்லை,

6. வேள்வித்தொடர்பான கதைகள் ,வேள்வித் செய்யும் முறைகள் ஆரிய வேதங்களிலும், இலக்கியங்களிலுமே மிகுதியாகக் கூறப்பட்டுள்ளன. தமிழில் மிகக் குறைவு.

7. 'வேள்வி முதல்வன்'[2] என அழைக்கப்படும் இந்திரன் திராவிடக் கடவுளல்லன். ஆரியக் கடவுள் என்பது இருக்கு வேதத்தால் தெளிவாகிறது. பழந்திராவிடரை அழிக்கத் தலைமை தாங்கிய ஆரியத் தலைவன் இந்திரன் என்பதும், அவன் தசுயூ [Dasyus]க்கள் எனப்படும் பழந் திராவிடரின் கோட்டைகளை அழித்தமையால் 'புரந்தரன்' [கோட்டைகளைத் தகர்ப்போன்] எனறு ஆரியரால் வேதங் களில் போற்றப்பட்டான்[3] என்பதும் அவன் ஆரியக் கடவுளே என்பதை உறுதிப்படுத்தும்.

8. ஆரியர்க்கு முற்பட்ட தமிழ நாகரிகத்தை எடுத்துக் கூறும் 'பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும்' என்ற தம்நூலில் அறிஞர் பாவாணர், தமிழர் நெறியாக வேள்வியைச் சுட்டிக்

---

[1] மார்சல் (John-Marshall), மாரிவாலா (C. L. Mariwala), சின்கா (N. K. Sinha), பானர்சி (R. D. Banarji), பாதிரி ஈராசு (Fr. Heras),பில்லியோசட் (J.Fillozat), ஆல்(H. R.Hall), சாட்டர்சி (S. K. Chattarji),சேசய்யங்கார், பர். மு. ஆரோக்கிசாமி, பர். மா. அரசமாணிக்கனர்-ஆகியோரின் நூற்களாலும். கட்டுரைகளாலும் அறியப்படுவது.

[2] பரிபாடல் 5-31இல் 'வேள்விமுதல்வன்' என்றழைக்கப்படும் இந்திரன் திராவிடக் கடவுளல்லன் என்பதே ஈண்டுக் கருத்து. தொல் காப்பியத்தில் (அகத்திணை 5) வரும் (வேந்தன் – இந்திரன்) என்பதை இக்கருத்து உட்படுத்தாது.

[3] தமிழ்நாட்டு வரலாறு. பர். மு. ஆரோக்கியசாமி. பக். 15.

காட்டவில்லை என்பதும் இங்குக் கவனித்தற்குரியது.[1]

மேற்காட்டியவற்றால் வேள்வி தமிழர் நெறியன்று என்பது உறுதியாகிறது. வந்தேறிகளான ஆரியர், தமிழ் மன்னரைச் சார்ந்து தம் நெறியான வேள்வி நெறியைப் பின்பற்றச் செய்தனர். வேள்வி செய்வதால் பார்ப்பனரே மிகுந்த பொருட்கள் பெறுவர் என்பது பதிற்றுப்பத்தால் தெளிவாகிறது.

ஆரியர் புகுத்திய வேள்வி தமிழ் மன்னரையும் மக்களையும் எந்த அளவு கழகக் காலத்திலேயே கி. பி. 3. ஆம் நூற்றாண்டுக்குள்ளாகவே ஊறுபடுத்தி விட்டது[2] என்பதைக் கீழ்வரும் இலக்கியக் குறிப்புகள் உறுதி செய்கின்றன.

வேதவேள்வி: புறம் - 224.
வேள்வி: தொல்காப்பியம் – பொருள் - 90
அகநானூறு – 13, 220
பதிற்றுப்பத்து – VII பதிகம். 6, 64, 70, 74.
புறநானூறு – 15, 26. 361, 400
பெரும்பாணாற்றுப்படை - 315-6

---

1. பாவணாரின் இந்நூல் ஆரியர்க்கு முற்பட்ட தமிழ நாகரிகத்தை உணர்த்துகிறது என்பது அவர்தம் முன்னுரையால் தெளிவாகிறது. நூலுள் சமய ஒழுக்கம் (பக். 94–101), என்ற தலைப்பிலோ, அரசர் பண்பாடு (பக். 21–218) என்ற தலைப்பிலோ தமிழர் நெறியாக வேள்வியை அவர் சுட்டவில்லை.

2. The poems of the Sangam age doubtless imply that such costly Vedic rituals were more common in that age. Prof. K. N. A. Sastri's. Colas. P. 451.

'The custom celebrating its achievements by elaborate rituals of vajbeya, rajasuya, and aswamedha sacrifices had also come into vogue in this age'.

The Early History of the Deccan. Edited by Prof. G. Yazdani. P. 68.

மதுரைக்காஞ்சி – 494.
கலித்தொகை – 36
பரிபாடல் – 2-62, 5-26, 13-56
திருமுருகாற்றுப்படை – 96, 156
திருக்குறள் - 87, 88, 259.
சிலப்பதிகாரம் – 12-35, 13-69, 18-131, 132, 176, 178, 192, 199, 232, 30-162.
மணிமேகலை – 13-28, 33.

வேள்விக் கிழத்தி: சிலம்பு - 28-183.
வேள்விச் சாந்தி: சிலம்பு - 28-194.
வேள்வி நிலை: தொல். பொருள் - 90-6.
வேள்விப் பாகம்: பரிபாடல் - 5-26, 27
வேள்வி முதல்வன்: பரிபாடல் - 5-31
யாகம்: புறம் - 15, 122, 166, 224, 400

(வளரும்)

முகவர்கள் கவனத்திற்கு....

ஒவ்வோர் ஆங்கில மாதமும் 5ஆம் நாளுக்குள் முந்தைய மாதப் பட்டியல் தொகையைக் கட்டாயம் விடுத்து விடுக!

பணம் விடுக்கும் பொழுது தேவையான படிகள் பற்றியும் பிற வற்றையும் விளக்கமாகக் குறிப்பிடுதல் இன்றியமையாததாகும்.

படிகள் சரிபார்த்தே விடுக்கப் பெறுவதால் இடையில் நேரும் குறைபாடுகளுக்கு அலுவலகம் பொறுப்பாகாது.

தேவையான மிகுதிப்படிகட்கு முன்கூட்டியே தெரிவித்தல் வேண்டும்.

தென்மொழிக்கும் தமிழ்ச்சிட்டுக்கும் சேர்த்துப் பணம் விடுப்பவர்கள் தனித்தனியே அவற்றைத் தெளிவாக எழுதுவதுடன் பட்டியல் எண், நாள் முதலியவற்றையும் குறிப்பிடுதல் வேண்டும்.

முன்பணம் கட்டுபவர்களும், விற்பனை முன் பணம் அனுப்புவர்களும் அவற்றை விளக்கமாக எழுதுதல் வேண்டும்.

–அமைச்சர்.

ஆங்கில மொழியாக்கம்

THE SUN

BARADHIDASAN.

You are a thing of light, O Sun!, an uncomparable one in the world. You are a thing of fire that makes the merry heart dance. You have risen from the deep waters... You scatter gold all over the sky... You have made the surging waves of the sea brilliant.

All the creatures woke up. There was no darkness nor was their any weariness, for, O light, you have risen! And you have caused a flood of feelings everywhere. O king of flames; every ray which you have sent out did climb up to the West, gleaming, and glowing there it broke out into a crore of colours.

You are a lion with a golden mane that stands on its end, spreading up and glittering. You are a never dying body of fire that burns along the path of heaven scattering rich brilliance. And you are a hill of ruby and a plate of spotless gold! You are also a big flame from the lamp of the sky!

Crores and crores of Rays you send to the seas... and crores and crores of your brilliant rays reach out to the high heavens... bathing in light in the meanwhile the hills, forests, houses ponds or rivers!

What a wondrous sight you are! The cool sea is glimmering with your rays... like a fabric of gold, - the golden threads woven with the cotton ones - fluttering in

the wind... And if darkness was a jack fruit the light which your rays have brought out is like the sweet fleshy core, inside it.

You reach out your tender hands, take the glistening pearl - like dew and swallow it up. Then you bring out from your mouth beauty and light in waves. And you safeguard every leaf by drying it up and cleaning it. And you wet the mountains and the groves with your golden rays.

You have unfolded the lotus buds. You have made the tender leaves of the mango gleam in emerald green. Even on the crest of the cock I see your beauty. You are the king, a great millionaire of light... And a warm one whom people praise.

The folded wings of birds you have enlivened and the birds rose up! And you have given the women the power to do the righteous thing. You live on the hill - like shoulders of men. And you animate the cattle too. And you are a source of pleasure in the life of the heroic Tamil race.

If the living light of yours is no more, the planets on the sky will lose their beauty...and appear like crude nuts... You are a farmer that cultivated the wasteland of life. You are the root of all food-plants, and a blanket for cold.

O, expanding light, dazzling the eyes! You are enthusiasm that kill weariness. You brush aside darkness and fill the earth with the flood of fire. We bask in your rays! O, Sun, a rare property you are! I hail you!

பெயர்ப்பு: ம. இலெ. தங்கப்பா.

மறைந்துவரும் தமிழ்ச் சொற்கள்

சோம்பல், அடிமை, அறியாமை யால்தமிழை
ஓம்பல் குறைவால் உலகவழக் கற்றொழிந்த
பைந்தமிழ்ச் சொற்கள் பலகோடி! ஈங்கதனுல்
நைந்த தமிழர் நலிவு பலகோடி!
இன்று விழித்தோம்; இனியேனும் செந்தமிழை
நன்ருகப் பேணிவர நாம் முனைவோம்; நாற்புறமும்
சென்று மறைந்து வரும் செந்தமிழ்சேர் சொற்களை
ஒன்று திரட்டி, உரியபொருள் ஆய்ந்தெழுதி
இப்பகுதிக் கேவிடுக்க; ஏற்ற பயின்றிடுக;
செப்பம் மொழிக்குச் சிறப்பு.

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்:
கமலாஇராயப்பன், சேந்தமங்கலம், திருத்துறைப்பூண்டி (வழி) த.மா.

அகுறு–சிறிய தட்டையான மண்சட்டி.
அடுக்கு (படித்தல்)–நாடகங்களுக்கு ஒத்திகைக்காக (படித்தல்)
உழவாரம்–புல் செதுக்கும் கருவி.
ஏவல்–கெட்ட ஆவி(பேய்)களைப்பிறர்க்குக் கேடு விளைக்க ஏவி விடுதல்.
கவணை–மாடுகளுக்கு வைக்கோல் போடும்போது வைக்கோல் சிதருமல் இருப்பதற்காக வைக்கப்படும் வளையம் போன்ற படல்.
கோக்காலி–மிகத் தாழ்வான, (மரக்கழிகளால் ஆன) பந்தல். வைக்கோல் போன்றவற்றைத் தரையில் படாமல் வைக்கப் பயன்படும். சரை–பாதை, வழி
சுணை–அரிப்பு; அரிக்கும் தன்மையுள்ள பொருள், கூர்மை.
சுளுக்கி-சூலம் (ஈட்டி) போன்ற ஆனுல் இரு முனையுள்ள கருவி.
சொக்குதல்–மயங்குதல்.
துலைவாய்–நீர் இறைக்கும் இடங்களில் ஏற்றம் உள்ள இடத்திற்குக் கீழே நீர் அதிகமாகத் தேங்கிநிற்பதற்காக அமைக்கப்படும் ஆழமான பகுதி.
நச்சி (விதை)–மெலிந்த, செழுமையற்ற விதை.
நெட்டி-தக்கைச் செடி; கை, கால், விரல் மூட்டுக்களில் எழும் ஒலி.
புலட்டு–கபடம்.
மத்துவம்–ஏற்றங்களில் நீரை வெளிக்கொணர்ந்து கொட்டும் இடம்.
வங்கு–(பெரிய) வளை. வஞ்சி–பாத்திகளின் கரை.

வாகான–சரியான, பொருத்தமான, நேரான
வாசாப்பு–நீண்ட வரலாற்று நாடகம்.
வாட்டம்–சோர்வு, நேரான அமைப்பு.
வைப்பு(வைத்தல்)–கெட்ட ஆவி(பேய்)களைக் கொண்டு ஒருவர் வாழ்க்கையைச் சீர்கெடச் செய்வது.

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்.

ப. நக்கீரன் (தலைவர்) தமிழ்மன்றம். கடலூர்-2.

வலி–இழு. (வலிப்பு–இழுப்பு)
வாடை–நூறு கற்றைகள் அடங்கிய விழல் கட்டு.
விளாவு–கலத்தல்.
வாடு–வலைவீசி மீன் படிப்பதை 'வலைவாடு' என்கின்றனர்.
வாட்டம்–தகுதியான, சரியானது.
பால் மாறுதல்–சோம்பல் கொள்ளுதல்.
பொலிப்பு–காளையின் பால்விழைச்சைக் குறிக்கும் சொல்.
பாடு சாய்தல்–நிலவு சாய்வதை, 'நிலாப்பாடு' சாய்தல் என்பர்.
பொசிப்பு–நல்வினை, நல்லூழ்.

(கீழுள்ளவற்றை அனுப்பியவர்: 'மாலிறையன்' காவானூர்)

அழும்பு–வீணுதல். அடாவடித்தனம்–குறும்புத்தனம்.
உதம்பல்–உளையாயிருத்தல்.
ஊத்தா–மீன் பிடிக்க உதவும் மேல் கீழ் திறந்த மூங்கிலாலானகூடு.
உரி–அரைப்படி. ஐங்கால் பயிர்–விலாத்தியாக உள்ள பயிர்.
ஒத்தி–விலகி. குறுணி–ஒரு மரக்கால். குச்சில்–குடிசை வீடு.
குச்சி கொளுத்துதல்–கோள் சொல்லுதல்.
கும்மல் நாற்றம்–புகை நாற்றம்.
கொடுங்கை–இரண்டு கையால் அணைத்தெடுக்கும் அளவு.
கோமாளி–மூங்கிலின் கீழ்க் கன்றுக்குப் பெயர்.
சவலைப் பிள்ளை–தாய்ப்பாலில்லாக் குழந்தை. (தாய் கருவாயிருக்கும் காலத்தில் உள்ள கைக்குழந்தைக்குப் பெயர்)
சாவிபோதல்-பதர்-உள்ளீடற்றது-வெறுந்தோலாயிருத்தல்.
தாங்கல்–சோறு ஆறவைக்கும் தட்டு.
திராங்கு–சிறிய கொக்கித்தாழ்ப்பாள்.

துவையல்-துவைப்பதற்கான அழுக்குத்துணி.
தொப்பையாக-முழுவதும். தோதாக-தகுதியாக-ஏற்றதாக.
நமுத்தல்-ஈரமாக்கல். நண்டல் சோறு-பொங்கல் சோறு.
நன்னி பயறு-முதிராது காய்ந்த பயறு. நாழி - ஒருபடி.
நோக்காடு-வலி. பதக்கு-இரண்டு மரக்கால்.
பரிவர்த்தனை-பண்டமாற்று. பத்தாயம்-மரத்தாலான தொம்பை.
பட்டி-மாடு அடைக்குமிடம். பிசிர்-அதிகப்படியான-தேவைக்குமிறிய.
புடம்-சூட்டினுல் வேகவைத்தல். மண்டலம்-48 நாள் கொண்டது.
முடைதல்-பின்னுதல். வாய்க்கால் தோள்-வாய்க்கால் பக்கம்.
வயணம்-காரணம், சுவை.

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர். (அ. இராயப்பன்
தலைமையாசிரியர், கூ. ம. பள்ளி வீணங்கேணி, கோபாலபுரம்)

அள்ளை-விலாப்பக்கம். அருகங்கால்-அருகம்புல் நிரம்பிருக்கின்ற இடம்
உரிவலை-நூல்கயிற்ருல் உரிமாதிரி பின்னி அதனுல் மீன் பிடிப்பது.
எரவாணம்-கூரையின் அடிப்பகுதி.
ஒழுங்கை-கொடிபாதை;மக்கள்ஒதுங்கி ஒழுங்காகச்செல்லுகின்றஇடம்.
ஓதம்-ஈரம் கசிந்துள்ள இடம்.
கத்தா-கிராமங்களின் ஏரி வாய்க்கால் இவற்றில் மீன்பிடிக்க உதவும் நூலினுல் ஆன சிறு வலை.
கட்டிகலப்பு-ஈரமில்லாத உழுத நிலத்தில் விதைப்பது. (மழை பெய்த வுடன் விதை முளைக்கும்)
கசிர் அடித்தல்- அணையால் சூழப்பட்ட தண்ணீர் அணையின்வழியாகக் கசிந்து வெளிவருதல்.
கிச்சான்(கித்தான்)-நூலினுல் வலை மாதிரி பின்னப்பட்டுப் பை போன் றிருக்கும்; வலைஞர்கள் மீனைப்பிடித்து அதில் போட்டுக்கொள்வார்கள்.
கிடாவடி-நெற்தாள்களைப் பரப்பிவிட்டு மாடுகளைப் பிணைத்து ஓட்டு கிற இடம்.
கோட்டுக்கழி-புன்செய் நிலத்தில் களை எடுக்கும்போது ஓராளுக்கு இவ் வளவு மெனை என்று கோடு கிழிப்பதற்குப் பயன்படுத்தும் கழி.
சப்பை-மெலிந்த.
சும்மாடு-தலையில் பொருள்களைச் சுமந்து செல்லப் பயன்படும் கருவி.
சேடைபாய்ச்சுதல்-கேழ்வரகு போன்ற பயிர்களை நட்டு முதன்முதலாகத் தண்ணீர் பாய்ச்சுவது.
தம்பட்டை-பொலிகாளை.

பணிக்கர்-கூரை விடுகளுக்குக் கூரை வேய்பவர்.
பட்டம்-புன்செய் நிலங்களில் துவரை, மொச்சைப் பயறு போன்ற வற்றைச் சிறிது இடைவெளிவிட்டு வரிசையாகப் போடுதல்.
மண்டா-வேல்போல் உள்ள ஒரு கருவி. மோள்-வலையின் உச்சி.

கீழுள்ள சொற்களைத் தொகுத்தவர்: ஆறு. சீனிவாசன், பி. எசி. இரண்டாமாண்டு.தமிழ்ப்பேரவைத் துணைச்செயலர்,அரசின ர்கல்லூரி, [குடந்தை.

சார்வு, வாரி-வாரம், தாழ்வாரம். குத்துதல்-ஊற்றுதல்.
கிடுக்கு-மூலை முடுக்கு. ஆளோடி-தெரு ஓரம்.
மோரி-சாக்கடை (வாய்க்கால்)அலங்கம்-கோட்டையின் அரணமைப்பு.
தொண்டி-கடலின் கழி. மஞ்சம்-கேடயம். பிலாக்கணம்-ஒப்பாரி.
நகிடி-கேலி. படிமால்-குறிப்புச் சிட்டை (அல்லது) குறிப்பு அட்டை.
ஈருயிர்க்காரி-இரு உயிர்க்காரி, பிள்ளைத்தாய்ச்சி.
எக்கச்சக்கம்-பெரிய என்று பாண்டிய நாட்டிலும் ''சிக்கல்'' என்று சோழநாட்டிலும் வழங்கப்படுகிறது.

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்:
நெல்லை. க. இராமசாமி, பி. ஏ., திருப்பாணாழ்வார் தெரு, [கொக்கிர குளம், திருநெல்வேலி-1.

கூனை-கமலையின் நீர் இறைக்கப் பயன்படும் கருவி.
செவற்காடு-செம்மண்நிலம். கெடி-நிலையம் (புகைவண்டி நிலையம்)
வளைசி-வளையல் (முயற்சி, நிகழ்ச்சி என்பனபோல் 'சி' விகுதி பெற்ற பெயர்ச்சொல்) ஒலுங்கு-கொசு.
மம்மந்தம்-கரும்புத் தோட்டங்களிலும், வாழைத் தோட்டங்களிலும் இருக்கும் பெரிய கொசு.

உறுப்பினர் கவனத்துக்கு, . .

முகவரி மாற்றம் வேண்டும் உறுப்பினர்கள் தங்கள் பழைய முகவரியையும் தெளிவாக எழுதுவதுடன் தம் உறுப்பினர் எண்ணையும் தவறாமல் குறிப்பிடுதல் வேண்டும்.

இதழ் வெளியாகும் நாளுக்கு ஐந்துநாள் முன்னதாக வரும் வேண்டுகோள்கள் மட்டுமே ஏற்கப்பட்டு முகவரி மாற்றப்படும். ஏனையவை அடுத்த திங்களில்தான் மாற்றப்படும் —அமைச்சர்

அச்சக அமைப்புக் கடன் திட்டம்

(6-10-66 முதல் 30-11-66 முடிய அலுவலகத்திற்கு வந்ததொகைகள்)

அன்பளிப்பு.

திரு. மு. அந்தாளன், கள்ளக்குறிச்சி.	2	00
11-ஆம் முறையாகப் புன்செய்புளியம்பட்டி		
மறைமலையடிகள் மன்றச் செயலாளர்		
திரு. பு. க. பாலசுப்பிரமணியம்.	1	00
அவர்வழி: மறைமலையடிகள் மன்றம்.	1	00
திரு. இரா. ஆறுமுகன்.	1	00
,, ஆடலரசு.	1	00
,, கு. சுப்பையா.	1	00
,, சு. பாலசுப்பிரமணியம்.	1	00
மன்னார்குடி அன்பர் திரு இளஞ்சித்திரன் அவர்கள் திரட்டிவிடுத்த தொகை:		
திரு. பா. சந்திரசேகரன், உள்ளிக்கோட்டை.	2	00
,, பி. ச. பக்கிரிசாமி, மாதேவன் பட்டினம்.	5	00
,, இரா. கண்ணன், மன்னார்குடி.	2	00
,, இரா. கலியபெருமாள், மன்னார்குடி.	2	00
,, இரா. வேலாயுதம்.	2	00
,, சோ. வீரப்பன், சேரன்குளம்.	2	00
,, கி. வீரமணி, மன்னார்குடி.	2	00
,, அ. க. பரிபோல், தண்ணீர் குன்னம்.	2	00
,, அ. அரசாங்கம் } ,, வே. சீதாராமன் } ,,	2	00
,, பழனிகாத்தபெருமாள், பாலக்குடி	3	00
,, மீ. முகமதுஅலி, மன்னார்குடி.	2	00
,, சோம. கலியமூர்த்தி.	2	00
,, இர. ஆறுமுகம்,	2	00
,, வை. அமிர்தலிங்கம், கண்ணாரப்பேட்டை.	5	00
,, ப. இராசு, மன்னார்குடி.	2	00
,, இரா. குமுதன், ,,	2	00
,, குப்புசாமி, ,,	1	00
திரு. கு. சுந்தரமூர்த்தி, திருப்பனந்தாள்.	10	00
திரு. புலவர். ஆர். கே. நாராயணசாமி, தரங்கம்பாடி.	5	00

கரியாம்பாடி ஆசிரியர் திரு. த. வையாபுரி அவர்கள் வழியாக.		
திரு. த. வையாபுரி ஆசிரியர்.	1	00
,, ஆ. மருதையப்பன் ,,	1	00
,, ம. பொ. ஆறுமுகம் ,,	1	00
,, சா. சாத்தப்பன் ,	1	00
,, பெ. அருணு. கோவை, 4.	2	00
திரு. வே. நடராசன். கிளியூர்	5	00
திரு. பாரிமுகில், கரூர்.	5	00
12-ஆம் முறையாகப் புன்செய் புளியம்பட்டி மறைமலையடிகள் மன்றச் செயலாளர் வழி.		
திரு. பு. கா. பாலசுப்பிரமணியம்.	1	00
மறைமலையடிகள் மன்றம்	1	00
,, இரா. ஆறுமுகன்.	1	00
,, ஆடலரசு.	1	00
,, கு. சுப்பையா.	1	00
,, சு. பாலசுப்ரமணியம்.	1	00
நம்பியூர் திரு. பா. கு. சுப்பையன் அவர்கள் வழி.		
திரு. கே. துரைசாமி, செட்டிபாளையம்.	5	00
,, நடராசன் ஆசிரியர். எல்லப்பாளையம்.	5	00
,, செயச்சந்திரன் ஆசிரியர். கடாரை.	1	00
,, பா. கு. சுப்பையன், நம்பியூர்,	1	00
திரு இராசு. தேவேந்திரன். சென்னை-33.	5	00
திரு. பொய்யாமொழி.	100	00
,, குமு. குப்பழகன், மிதிலைப்பட்டி	1	00
புலிகரம்பலூர் திரு. அ. பொன்னுசாமி. வழி.		
திரு. இரா. கோ. இராசன், எழுத்தர்.	1	00
,, பி. கந்தசாமி, கண்டமாத்தான்.	2	00
,, மு இராசலிங்கம். புலிகரம்பலூர்.	2	00
,, அரங்க. சண்முகம் ,,	0	25
,, மாய. வேங்கடாசலம், தச்சூர்.	0	25
,, மா. கண்ணன், ,,	1	00
,, கோ. தேவாசீர்வாதம். ,,	1	00
,, பி. செயராமன், ,,	0	50
,, மா. கிருட்டிணசாமி. ,,	0	50

,, தொ. மா, பெரியசாமி. தொழுதூர்.	0	50
,, தொ. மு. பலராமன். ,	1	00
,, இரா. கந்தசாமி, தச்சூர்.	1	00
,, தொ. அழகப்பன். புலிகரம்பலூர்.	0	25
கண்டமாத்தான் திரு. அ. பெரியசாமி வழி.		
,, அ. பெரியசாமி. கண்டமாத்தான்.	1	00
,, சி. அரங்கநாதன், அத்தியூர்.	0	25
,, து. அதிருபன், மயிலம், திருச்சி-8.	1	00
,, பெ. இராமராசு, ஒகளூர்.	0	50
,, சு. செகந்நாதன், பெருமாபாளையம்.	0	50
,, சி. சீனிவாசன், இருகாலூர்.	0	50
,, இராசமாணிக்கம்.	0	50
செ. காட்டுப்பாளையம், திரு. க. குழந்தை வழி.		
,, அ. தங்கவேலு.	1	00
,, பா. பாலசுப்பிரமணியன், சுண்டமேடு.	1	00
,, கா கணபதி, காட்டுப்பாளையம்.	2	00
,, இரா. சுப்பிரமணியம், ,,	1	00
,, என். சிதம்பரம். ,,	1	00
,, வெ. இராசப்பன். ,,	1	00
,, இரா. பொன்னுச்சாமி ,,	1	50
,, இரா. செல்லதுரை, கொமரநல்லிபாளையம்	5	00
,, இரா. துரைசாமி. பள்ளக்குழி.	3	00
,, க. முருகேசன்; ஆட்டையாம்பட்டி.	2	00
,, ப. மா. பழனிசாமி, இருகாலூர்.	3	00
,, க. இரத்தினவேலவன், பாப்பாப்பட்டி.	5	00
,, கு. செங்கோடன், காட்டுப்பாளையம்.	1	00
,, அ. ஞானப்பிரகாசம். ,,	1	00
,, ஆ. ஆறுமுகம், செண்பகமாதேவி	1	00
,, க. சண்முகம் ,,	1	00
,, வே. கிருட்டிணன்.	1	00
,, முத்துச்சாமி. கோவை.	1	00
திரு. குமு. குப்பழகன். மிதிலைப்பட்டி.	1	00
மொத்தம்:	252	00
முன் மொத்தம்:	7661	64
தொகு மொத்தம்:	7913	64

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

திருக்குறள் அதிகார அடைவு வெண்பா

புலவர். வே. அரங்கசாமி.

கங

[125]நெஞ்சின் கிளத்தல்; [126]நிறையழிதல்; தம்[127]வயின்
துன்பம்; [128]குறிப்பறிவு சொல்லல்; [129]புணர்விரைதல்;
[130]நெஞ்சப் புலத்தல்; [131]புலவி; [132]புலநுணுக்கம்;
மிஞ்சு[133]ஊட லின்ப மிவை. 9

125 நெஞ்சொடு கிளத்தல். 126 நிறையழிதல். 127 அவர்வயின் விதும்பல். 128 குறிப்பு அறிவுறுத்தல். 129 புணர்ச்சி விதும்பல். 130 நெஞ்சொடு புலத்தல். 131 புலவி. 132 புலவி நுணுக்கம். 133 ஊடல் உவகை.

கச

அறத்துப்பால் - இயல்கள்.

பாயிரம் நான்கே; இருபதா மில்லறம்;
மாயிரு ஞாலத்து மேன்மக்கள் போற்றும்
துறவறம் பத்தொடு மூன்று; ஒன்றும் ஊழும்
அறமென்றுர் வள்ளுவ ராழ்ந்து.

திருக்குறளின் தொடக்கத்தில் கூறப்பட்ட நான்கு அதிகாரங்கள் பாயிரம் என்ப; பின்னருள்ள இருபது அதிகாரங்கள் இல்லறமாம்; பெரிய உலகத்தின்கண் வாழும் மேன்மக்கள் போற்றுகின்ற துறவறம் பதின்மூன்றுகும்; ஊழ்பற்றிய தொன்று; இவையெலாம் அறமென்று கூறினுர் ஆழ்ந்த அறிவுடைய வள்ளுவர் என்ப.

கரு

பொருள், காமம் - இயல்கள்.

அரசிருபத் தைந்தங்கம் முப்பத் திரண்டு
வரன்முறை பத்தொடு மூன்ருெழிபு; ஏழெனத்
தீட்டும் களவியல்; கற்பியல் பத்தெட்டாய்க்
காட்டும் பொருள்காமம் காண்.

அரசியல் இருபத்தைந்து அதிகாரங்களும், அங்கவியல் முப்பத்திரண்டும்; முறையே வரிசைப்படுத்தப்பட்ட பதின்மூன்று ஒழிபியலுமாம்; களவியல் ஏழு என்று எழுதப்பட்டுக் கற்பியல் பதினெட்டு எனப் பொருட்பாலும், காமத்துப்பாலும் காட்டுகின்றது; அறிவாயாக என்பதாம்.

(முற்றும்)

எங்ஙனம் வாழ்வோம் நெஞ்சே!

மு. மகிழரசன்.

உள்ளத்தை மறைக்கின்ற உணர்வறியோம்;
உதட்டுநகை அறியோம்; நெஞ்சே!
கள்ளத்தைப் பயில்கின்ற கருத்தறியோம்;
கவடு,பகை அறியோம்; புன்மைப்
பள்ளத்தின் நலம்கருதிப் பணிந்தறியோம்;
பசப்புமொழி அறியோம்; யார்க்கும்
எள்ளளவும் தீதறியோம், இவ்வுலகில்
எங்ஙனம்நாம் வாழ்வோம் நன்றே! 1

பொய்சொல்லும் வகையறிந்து பிழைப்பறியோம்;
புனைந்துரைத்தல் அறியோம்; செல்வம்
வைத்திருக்க வவ்வுதலின் விரகறியோம்;
வறட்டுப் பீ டறியோம்; வஞ்சம்
கைவளர்க்கும் வலிமையினைக் கண்டறியோம்;
கன்னக்கோல் அறியோம்; இன்னே
உய்கின்ற தகவறியோம். எங்ஙனமிவ்
உலகினிலே வாழ்வோம் நன்றே! 2

கால்பிடிக்கக் கைபிடிக்கக் கற்றறியோம்;
கொத்தடிமை அறியோம்; மெல்லோர்
மேல்சிணுங்கி ஏமாற்றும் மேய்ப்பறியோம்;
மெத்தவர வறியோம்; கீழோர்
வால்பிடித்துக் கூனுகின்ற வகையறியோம்;
வயிற்றினலம் அறியோம்; ஏவல்
கோல்பிடிக்கும் தொழிலறியோம். எங்ஙனமிக்
குவலயத்தே வாழ்வோம் நன்றே! 3

நினைத்ததைச்சொல் லாதிருக்கும் நிலையறியோம்;
நிலைகெடுதல் அறியோம்; சொன்ன
பினரதற்குச் செயல்மறுக்கும் பிழையறியோம்;
புறங்கொடுத்தல் அறியோம்; தீயார்க்(கு)
இனித்ததைச்சொல் லிப்புகழும் இழிவறியோம்;
ஏய்க்கும்நிலை அறியோம்; என்றும்
இனைத்தகைய புன்மையிலே இருந்தறியோம்;
எங்ஙனம் நாம் வாழ்வோம் நன்றே! 4

வீண்பெருமை பேசுகின்ற விருப்புற்றோர்
விளைநலனை அறியோம்; சான்ற
நாண்மறப்பின் நயந்துவரும் நலம்கருதோம்;
நடுச்சாய்தல் அறியோம்; நட்டோர்
சேணிருக்கப் புறங்கூறும் செறிவறியோம்;
சிற்றுணர்வை அறியோம்; நம்மைப்
பேணுதற்கென் றென்றறியோம். எங்ஙனமிப்
பெரும்புவியில் வாழ்வோம் நன்றே! 5

புன்மைக்குப் பல்லிளிக்கும் பண்பறியோம்;
புதுவாழ்வும் அறியோம்; வேற்றோர்
நன்மைக்குப் பகைபூணும் நடையறியோம்;
நடுவழியில் கழுத்த றுக்கும்
வன்மைக்கொத் துயிர்வளர்க்கும் வழியறியோம்;
வம்பறியோம் அறியோம்; போலித்
தன்மைக்கொத் துவப்பறியோம். எங்ஙனமித்
தாழ்வுலகில் வாழ்வோம் நன்றே! 6

உழைக்காமல் உண்டிடஓர் உளவறியோம்;
ஊதியமும் அறியோம்; மற்றோர்
பழிக்காமல் புகழெய்தும் பகட்டறியோம்;
புறத்துநடிப் பறியோம்; 'தன்னை
நுழைக்காமல்' பிறர்க்கெடுக்கும் நயவஞ்ச
நுண்கலைகள் அறியோம்; கோடி
வழிகாணும் உலகிலொன்று வகுத்தறியோம்;
எங்ஙனம்நாம் வாழ்வோம் நன்றே! 7

புன்னகைத்தே புண்படுத்தும் கலையறியோம்;
புரட்டுகளை அறியோம்; வாழ
என்னசொல்லி யும்பழகும் 'எழில்!'அறியோம்
இரண்டகமும் அறியோம்; ஒன்று
முன்னுரைத்த பின்,மாற்றும் முரணறியோம்;
முறைகேடும் அறியோம்; வெற்றே
மின்னுகின்ற மினுக்கறியோம்; எங்ஙனமிம்
மண்ணுலகில் வாழ்வோம் நன்றே! 8

மூட்டழற்சி

பழ. பழனியப்பன்.

முன்னுரை:-மூட்டழற்சி என்பது மூட்டுகளில் ஏற்படும் அழற்சியையும், சிதைவையும் குறிக்கும். எலும்புருக்கி நோய், நீரிழிவு நோய், வெட்டை நோய் (Gonorrhoea) உடையாரும் நுண்ணுயிர்களால் உண்டாகும் பிறநோய்களை உடையாரும் மூட்டழற்சியால் துன்புறுவர். இந்நோய்களுள் சில எல்லா மூட்டுகளிலும் அழற்சியைக் கொடுக்கின்றன; சில குறிப்பிட்ட மூட்டுகளில் மட்டுமே அழற்சியைக் கொடுக்கின்றன. ஈண்டு உருமட்டாய்டு (Rheumatoid) மூட்டழற்சி என்பதனைப் பற்றிச்சுருக்கமாக ஆய்வோம். இது பொதுவாகச் சிறு மூட்டுக்களையே தாக்கும் தன்மைத்தாதலின் இதனைச் சிறு மூட்டழற்சி என்றே கொள்ளலாம். நடுத்தர அகவையுடையோருள் மூன்று விழுக்காடு இந்நோய்க்கு இலக்காவர். நெசவுத் தொழில் செய்பவரும், குளிர்ப்பகுதிகளில் வாழ்பவரும் மிகையாக இந்நோயால் தாக்குறுவர்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

நாணத்தைத் துறந்துவிட்டு நடைபயிலும்
'நாகரிகம்!' அறியோம்; நல்ல
மானத்தை இழந்திருக்கும் மாண்புகெட்ட
மதியறியோம்; இங்குப் புல்லர்
கூனுற்ற கொள்கையொடு குழைந்திருக்கும்
கூட்டறியோம்; வாழ்தற் கென்று
தானுற்ற வாறெல்லாம் தரித்தறியோம்.
எங்ஙனம்நாம் வாழ்வோம் நன்றே! 9

கறைசூழ்ந்த உலகத்தில் கண்மூடிக்
கதறுகின்றோம்; கருத்து சோர்ந்தோம்;
சிறைசூழ்ந்த கொடுமையிலே மெய்நடுங்கிச்
சிலிர்க்கின்றோம்; செயலும் அற்றோம்;
நெறிசூழ்ந்த பாதையிலே நெடுந்துயரில்
நெளிந்தல்லால் தன்னலத்தின்
வெறிசூழ்ந்த வாழ்வறியோம்; எங்ஙனமிவ்
வெவ்வுலகில் வாழ்வோம் நன்றே; 10

கரணியம்:- இதன் கரணியம் என்ன வென்பது இன்னும் தெள்ளெனத் தெரியவில்லை. முன்னர், உடலுக்கு ஊறு செய்யும் நுண்ணுயிர்கள் தொண்டை, மூக்கு ஆகிய இடங்களில் தங்கி நலமழிப்பது தான் இதற்கு மூல வித்தெனக் கருதப்பட்டது; ஆனால் அது தவறென இப்பொழுது உணரப்பட்டுள்ளது. ஆண்,பெண் இரு பாலாரும் இதற்கு இரையாவர். மிகையாகப் பெண்கள் பீடிக்கப்பட்டுத் துன்புறுவர். குறிப்பாக உரு(25) முதல் சo(40) அகவையுடையோரே இந் நோய்க்கு ஆளாகின்றனர். ஆனால் சிறுவர்களுக்கும் முதியவர்களுக்கும் வராது என்று கூறமுடியாது.

உடலில் உள்ள 'நோய்த்தடுப்புத்திறன்'(Immunity Response) குறைபாடும், உணவுக்குறைபாடும் இந்நோய்க்கு இடந்தரலாம். மிகுந்த கவலையும், இடைவிடாக் கடும் உழைப்பும் மனநோயும் உடையவர்களிடை இந்நோய் மிகுதியாய்க் காணப்படுகின்றது. ஆகவே அவையும் காரணங்களாகக் கூடுமெனக் கருதப்படுகின்றன.

நோயின் தொடக்கநிலை:- இஃது இருவகைகளில் தொடங்கும். (அ) இம் மூட்டழற்சி ஏற்படப் பலநாட்கள் அல்லது திங்கள் முன்னரே உடலில் வலுவின்மை, களைப்பு, கை கால்களில் உணர்ச்சியற்று மரத்துப் போன தன்மை முதலிய குறிகள் ஏற்படும். நாளடைவில் கைகால்களில் ஊசியால் குத்துதல் போன்ற உறுத்தல்கள் ஏற்படும். உடல் எடை குறையும். பின்னரே மூட்டுகளில் வலியும், வீக்கமும் தோன்றும்.

(ஆ) மேலே சொன்னவற்றுக்கு மாறாக, உடல் நலங்குன்றி, உடல் வெப்பம் மிகுந்து ஓரிரு நாட்களில் மூட்டுக்களில் அழற்சியும் வலியும் ஏற்படுதலும் உண்டு.

இச் சிறு மூட்டழற்சியில் முதற்கண் கைவிரல் மூட்டுகள், கால் விரல் மூட்டுகள் போன்ற சிறிய மூட்டுகள் தாக்கப்படுகின்றன. பின்னர் மணிக்கட்டுமூட்டு,முழங்கைமூட்டு,முழங்கால்மூட்டுஆகியவை தாக்கப்படுகின்றன. நோய் முதிர்ந்த காலை தோள்பட்டைமூட்டு, இடுப்பு மூட்டு முதலியனவும் தாக்குறுகின்றன.

இந்நோயுற்றோர் இரவில் என்பில் குடையும் கடுவலியால் கண் துஞ்சார்; காலையில், தாக்கப்பட்ட மூட்டுகளைச் சார்ந்த தசைகள் விறைத்து நிற்பதையும் காணுவர்; நாளடைவில் விறைத்த தசைகள்

அம்மூட்டுகளை அசையா வண்ணம் செய்வதால் உண்ணுதல், உடுத்துதல் போன்ற சிறு வேலைகளைக்கூடச் செய்ய இயலாமல் துன்புறுவர். சிலர் நடக்கவும் முடியாமல் இடறுவர்.

ஏற்படும் மாற்றங்கள்: மூட்டுகளில் வீக்கமும் வலியும் மிகுதியாக இருக்கும்; மூட்டுகளின் மேலுள்ள தோல் பளபளப்பாகவும் மெல்லியதாயும் இருக்கும்; உடலின் மற்ற பகுதிகளைவிட அப்பகுதிகள் மிகுந்த வெப்பமாயும், செந்நிறமாயும் இருக்கும்; சார்ந்துள்ள நீர்மக் கட்டிகள் (Lymph Nodes) பெருத்திருக்கும்; சில அமையங்களில் 'தோலின்கீழ் கட்டிகள்' (Subcutaneous nodules) தென்படும், மணிக்கட்டு மூட்டிற்கு இரு விரற் கடை கீழும், விரல் மூட்டுகளைச் சுற்றியும் இக் கட்டிகள் மிகுதியாகக் கணப்படும். இக்கட்டிகள் குன்றுமணியளவிலிருந்து கொட்டைப்பாக்கு அளவிற்குப் பெருத்திருக்கும். மிகவும் நாட்பட்ட நிலையில் விறைத்த தசைகள் மூட்டுகளில் நிலைத்த முடக்கங்களை ஏற்படுத்தி விடும். குறிப்பாகக் கை விரல்கள் உள் நோக்கி நிலையாக வளைந்து விடுவதுண்டு.

ஆய்வு முறைகள்: (அ) செவ்வணுக் (Red Blood cells)களின் 'வீழ்படிவு வேகம்' (Sedimentation Rate) மிகுந்திருக்கும்.

(ஆ) புதிர்க் கதிர்ப்பட நோக்கில், மூட்டில் இணையும் எலும்புகளின் முனையில் சிதைவும், எலும்புகளின் இடையே உள்ள இடைவெளிக் குறைவும், எலும்புகளில் சுண்ணும்புச் சுதை நீக்கமும் தெரியும்.

(இ) ஆய்வுக்கூட விலங்குகளான மேழம், முயல் இவைகளின் குருதியோடு நோயாளியின் குருதியினையும் சேர்த்து ஏற்படும் மாற்றங்களிலிருந்தும் கண்டறியலாம்.

பண்டுவம்: கரணியம் என்னவென்று தெரியவில்லை யாதலின் கரணியத்தைத் தீர்க்க வல்ல பண்டுவம் அளிக்க இயலாது. ஆயினும் நோயின் தொல்லைகளினின்று விடுபட வழி தேட முடியும். மூட்டுகளில் வலியையும், வீக்கத்தையும் போக்கி அசைவுகளைத்தரப் பண்டுவத்தால் முடியும்.

ஓய்வு: கை கால்களை அசைக்க முடியாமல் தொல்லையுறும் பிணியாளனுக்கு நல்ல ஓய்வு தேவை. நோய்க் குறிகள் மறையும் வரை படுக்கை

யிலேயே இருக்கவேண்டும். இவ்வாறு பல கிழமைகள் அல்லது திங்கள் இருக்க நேரிடும்.

உணவு: நோயின் தொடக்க நிலையிலேயே, உடல் எடை குறையும் எனக்குறிப்பிட்டோம். எனவே உடலுக்கு ஊட்டமளிக்கும் பழங்கள், பால், முட்டை முதலியன உணவில் முதன்மையாக இடம்பெற வேண்டும், பால் கட்டாயமாக மிகுதியாகச் சேர்க்கப்பட வேண்டும்.

வலி, வீக்கம் போக்க: "ஆஃச்பிரின்" (Aspirin) என்ற மருந்து வலி போக்கும் மருந்துகளில் சிறந்ததாகும். இதனை உட்கொள்ள வலி நீங்கும். இரவினில் நன்கு உறங்க "அமைலோபார்பிடோன்" (Amylo-barbitone) உட்கொள்ள வேண்டும். வீக்கத்தைப் போக்க, "கார்ட்டிசோன்" (Cortisone) அளிக்கப்பட்டு வந்தது. இப்பொழுது அதனினும் சிறந்த "பிரிடினிசோலான்" (Predinisolone) கொடுக்கப்படுகின்றது. இம் மருந்தினை வயிற்றுப்புண், நெஞ்சாங்குலை நோய், சிறுநீரகநோய் உள்ளவர்கள் உட்கொள்ளக் கூடாது.

முட்டுகளில் தட்டைக்குச்சிகளை வைத்துச் சரியான முறையில் பொருத்திக் கட்டுப்போடுதல் வேண்டும். சின்னாட்களுக்குப்பின் கட்டுகளை அவிழ்த்து மூட்டுகளில் சிறிது அசைவைக் கொடுக்கவேண்டும். இப்பயிற்சி பல நாட்கள் தொடர்ந்து செய்யப்படவேண்டும். இந்நாட்களில் மூட்டுகளுக்கு வெந்நீர் ஒற்றடம் கொடுக்கலாம். இளஞ்சூடான மெழுகு பூசுதலும் நல்லது.

முடிவுரை: பண்டுவம் பெற்றவர்களுள் 40 விழுக்காடு நோய் நீங்கிப் பழைய நிலையைத் திரும்பப் பெறுகின்றனர்; 30 விழுக்காடு நோயினின்று நீக்கம் அடைவார்களே யன்றிப் பழைய நிலையை அடையார்; 30 விழுக்காடு நோய் நீங்கார். இவர்களுக்குப் பண்டுவம் பயனளிப்பதில்லை. இப்பிரிவினர்க்கு மூட்டுகளில் அசைவும் இரா; முடக்கங்களும் நீங்கா. பொதுவாக நோயின் தொடக்க நிலையிலேயே மருத்துவரை நாடுவோருள் பெரும்பான்மையோர் நலம் பெறுவர். முதிர்ந்த நிலையில் பண்டுவம் பெறுபவர் நலமடைவரென உறுதியாய் இயம்ப இயலாது. இளைதாக முள்மரம் களைதல் வேண்டும்; காழ்த்த விடத்துக் களைதல் கடினம். O

தென்மொழியின் தெளிந்த கொள்கைகள்!

1. தமிழ் நிலத்துள் தமிழே ஆட்சிமொழி ஆதல் வேண்டும்; மாநில இணைப்பு மொழியாகவும் உலகத் தொடர்பு மொழியாகவும் இருக்கத் தகுதியுடைய மொழி ஆங்கிலமே. இவ்விரு மொழிகளுமே தொடக்கக் கல்வி முதல் கல்லூரிக் கல்வி வரை பயிற்றப் பெறுதல் வேண்டும். இவையன்றிப் பிற கலை, நுண்கலை, தொழில், அறிவியல் முதலிய பல்துறைக் கல்வியும் தமிழிலேயே பயிற்றல் வேண்டும்.

2. தமிழ் நாட்டுள் தமிழர்களுக்காக நடத்தப்பெறும் தமிழ்த் தாளிகைகள், எழுதப்பெறும் நூல்கள் எல்லாவற்றும் தூய தனித் தமிழே வழங்கப்பெறுதல் வேண்டும். இவ்வமைப்பிற் கடிப்படையாக எல்லா முயற்சிகளையும் செய்தல்.

3. தமிழக அரசியல் கட்சிகள் தமிழ் மொழிக்கும், தமிழர்க்கும், தமிழ் நாட்டிற்கும் செய்துவரும் தொண்டில் போலியும், பொய்மையும் கலவா வண்ணம் அவற்றின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிப்பதுடன் தேவையான பொழுது கண்டிக்கவும் அவற்றை நல்வழியில் திருப்பவுமான நடுநிலைக்குழு ஒன்றினை அமைத்துச் செயற்படல்.

4. தூய தனித்தமிழ் நூல்களையும், பிறநாட்டு அறிவியல் நூல்களையும் தொடர்ந்து வெளியிட்டு வருவதன் வழி மொழியை வளர்த்தலும், மக்களின் பல்வகைப்பட்ட அறியாமையை நீக்குதலும் இவ்வழி உலகத் தமிழரோடும், பிற நாட்டாரோடும் தொடர்பு கொள்ளுதலும்.

5. குமுகாயத் துறையில் குலங்களையும் அவற்றொடு துணை போவாரையும், போலிச் சமயக் கொள்கைகளையும் அவற்றொடு துணை போவாரையும் அரசியல் துறையில் மக்களை மடமைக்கோ அரசியல் ஆரவாரங்களுக்கோ அழைத்துச் செல்லும் கட்சிகளையும், அறமற்ற ஆட்சியமைப்பையும், பொருளியல் துறையில் செல்வ ஏற்றத்தாழ்வையும், போலி வாணிகப் புனைசுருட்டல்களையும் சுட்டிக்காட்டிக் கண்டிப்பதுடன் இத்துறைகளில் ஏமாற்றமடையாவழி மக்களை எச்சரித்தல்.

6. சிறுபான்மையினரின் மொழி, நலம், பண்பாடு இவை உள்ளிட்ட உரிமை கெடாவண்ணம் செப்பமான குடியரசமைப்புக்கு வழியமைக்காவிடில், வடவர்க்கே தனியொரு வல்லாண்மையரசாக இயங்கும் நடுவணாட்சித் தொடர்பிலிருந்து தமிழகத்தை விடுவித்தலும் தமிழ் அரசை நிலைப்படுத்தலும்.

7. இவ்வடிப்படைக் கொள்கைகள் என்றும் சிதைந்துபோகா வண்ணம் இவ்வுலகம் உள்ளளவும் நீடித்து நிற்கச் செய்யவும் தொடர்ந்து செயற்படவும் ஒரு நிலையான அமைப்பை அமைத்தலும், அதில் அவ்வக்காலத்து உழைப்புளம் கொண்ட அறிவினரைத் தொடர்பு கொளச் செய்தலும் ஆகும்.

- அரசியல் என்பது இன்றைய புதுக் கண்டுபிடிப்பன்று!
- தமிழர்க்கு அது தொன்று தொட்டு வருகின்ற சீர்பெற்ற கொள்கை.
- மிகமிகப் பிந்திய உலகத்தின் அரசியல் கொள்கை, மிக மிக முந்திய காலத்திலேயே தமிழர் அரசியல் அறமாக வகுக்கப் பட்டிருக்கிறது.
- இவ்வுண்மைகளைத் தெளிவு படுத்தும் அரசியல் கிழமை இதழ்!

?

விரைவில் எதிர்பாருங்கள் !

தென்மொழிக்கு இரண்டாந்துணை!
முழு விளக்கமும் பின்னர்.
தென்மொழி.
கடலூர்-1.